KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr.Anantham oorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 23 மே 2025 இதழ்:- 21

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## இலங்கையின் போர்க் குற்றவாளிகளுக்கு தடை விதித்துள்ளமை குறித்து திருப்தியடைகின்றேன் பிரிட்டன் பிரதமர் பெருமிதம்!



இலங்கையில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு களிற்கு உள்ளான தனி நபர்களிற்கு எதிராக பிரிட்டன் சமீபத்தில் தடை களை விதித்துள்ளமை குறித்து திருப்தியடை கின்றேன் என பிரிட்டிஷ் பிரதமர் கெய்ர் ஸ்டார் மெர் தெரிவித்துள்ளார் அறிக்கையொன்றில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது (5ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

## வெளிநாட்டுத் தடைகள் காரணமாக என்னால் தென்னாசிய நாடுகளுக்குக் கூட போக முடியவில்லை - சவேந்திரா கவலை

2009ம் ஆண்டின் பின்னர் இலங் கையை ஆண்ட ஆட்சியாளர்கள் ஆதாரமற்ற யுத்த குற்றச்சாட்டுகளை எதிர் கொள்வதில் தோல்வியடைந்துள்ளனர் என இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு படை பிரதானியும் இராணுவதளபதியும் இறுதி யுத்தத்தில் 58 வது படைப்பிரிவின் தளபதியாக (6ம் பக்கம் பார்க்க)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## இலங்கையில் நடந்த போரை வெற்றியாக நான் பார்க்கவில்லை! இராணுவ வீரர்கள் நினைவு நாளில் அநுராவின் துணிச்சலான பேச்சு!



அதிகார மோகமுடையவர்கள் வடக்கிலும், தெற்கிலும் மீண்டும் இனவாதத்தை தூண்ட ஆரம்பித் துள்ளனர். இனவாதம் தலைதூக்குவதற்கு இனி ஒரு போதும் இடமளிக்கப்பட மாட்டாது. காலத்து க்கு காலம் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும், அதனைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும், தாம் செய்த குற்றங்களை மறைப்பதற்காகவும் யுத்தம் பயன்படுத்தப்பட்டுள்ளது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். கடந்த 19 மே 2025 திங்கட்கிழமை கோட்டை ஸ்ரீஜெயவர்தனபுரவில் போர் வீரர் நினைவு தூபி அமைந்துள்ள மைதானத்தில் 16ஆவது தேசிய போர் வீரர் நினைவு நாள் இடம் பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர் (21ம் பக்கம் பார்க்க)



## தமிழ்க்கட்சிகள் மாகாணசபைத் தேர்தலைக் கோர வேண்டும்! அநுராவின் புதிய அரசியலமைப்பு சூழ்ச்சிக்குள் சிக்கக் கூடாது!


THINKING OF
SELLING OR BUYING A HOME?
www.AgentSiva.com
Your neighborhood sales representative
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!
RE/MAX REALTRON Realty Inc. Brokerage
Home of the Top Producers
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Piravien Siva
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com
22 Years Real Estate Experience
885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated
Bus: 416-289-3333
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Warden/Finch
Scarborough $424,900
2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school
Kennedy / Hwy 401
Scarborough $429,900
1 Beds • 1 Baths • 5 Rooms
Newly Renovated Unit
Markham / Sheppard Ave
Scarborough $479,000
1 Beds • 1 Baths • 3 Rooms
Corner Condo Townhouse
McCowan / Ellesmere
Scarborough $599,000
2 Beds • 2 Baths • 5 Rooms
Just A Short Walk To STC
Mccowan & Hwy 401
Scarborough $549,900
2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views
Kennedy / 401
Scarborough $538,000
2 Beds • 1 Baths • 5 Rooms
Open Concept Living-Dining
Simcoe St / 401
Oshawa $575,900
3+1 Beds • 2 Baths • 5+1 Rooms
Newly Painted, 1100+ Sqft
Grandview Dr. / Bloor
Oshawa $649,800
2+2 Beds • 2 Baths • 7+4 Rooms
Upgraded floor, Newly renovated
9TH LINE / HIGHWAY 7
Markham $1,100,000
4 Beds • 4 Baths • 9 Rooms
luxury freehold townhouse
Dixie/ Glenanna
Pickering $799,000
3 Beds • 2 Baths • 6 Rooms
Great area close to all amenities
Audley Rd & Rossland Rd E
Ajax $799,000
3 Beds • 3 Baths • 8+3 Rooms
No maintenance fees Townhouse
Markham & Ellesmere
Scarborough $1,050,000
3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance
Morningside/Mcnicol
Scarborough $1,099,900
3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout
401/Morningside
Scarborough $1,249,000
4+2 Beds • 4 Baths • 12 Rooms
Easy access to the new 407
10th Line/ Hoover Park Dr
Stouffville $1,499,999
4+1 Beds • 4 Baths • 10 Rooms
3,162 Sqft ,Upgrades Designed
9th Line/Hoover Park
Stouffville $999,000
4 Beds • 3 Baths • 8 Rooms
Modern Living Elegant Upgrades

EELANADU
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாள்! கனடாப் பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கை!



இலங்கையில் ஆயுதப்போர் முடிவடைந்து இன்றுடன் 16 வருடங்கள் ஆகிவிட்டன. 26 வருடங்களுக்கும் அதிகமாக நீடித்த இந்தப் போரில் பல பத்தாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். இந்தத் தமிழ் இனப்படுகொலை நினை வேந்தல் நாளில் இழந்த உயிர்களையும், சிதறிப்போன குடும்பங்களையும் பேரழிவடைந்த சமூகங்களையும் இன்று வரை காணாமல் ஆக்கப்பட்டவர்களாகவே இருப்போரை யும் நாம் நினைவுகூருகிறோம்.

அத்துடன் தமது அன்புக்குரியவர்களின் நினைவுகளைச் சுமக்கும் கனேடிய தமிழ்ச் சமூகத்தையும் கனடாவின் பல பகுதிகளிலும் திட்டமிடப்பட்டுள்ள நினைவேந்தல் நிகழ்வு களையும் நாம் மனதிற் கொள்கிறோம்.

பொறுப்புக்கூறலுக்கும் உண்மை நீதி ஆகியவற்றை அடைவதற்கும் எடுக்கப்படும் சுதந்திரமான சர்வதேச முயற்சிகளைக் கனடா தொடர்ந்தும் ஆதரிக்கிறது. இந்த நினைவேந்தல் நாளை நாம் கடைப்பிடிக்கும் போது துணிவுடன் அஞ்சலி செலுத்துவதற்கான உறுதிப்பாட்டை யும் நீடித்திருக்கும் அமைதிக்காகச் செயற்படுவதற்கான உறுதிப்பாட்டையும் அது பலப்படுத்தட்டும்.

# தற்போதைய அரசாங்கம் நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலை நாட்டுமா? சர்வதேச மன்னிப்புச்சபை கேள்வி!

இலங்கையின் கடந்தகால அரசாங்கங்கள் போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லை என மறுத்துவந்திருப்பதுடன், அவை தொடர்பில் நம்பத்தகுந்த விசாரணைகளை முன்னெடுப் பதற்கும் தவறியிருக்கின்றன. இந்நிலையில் தற்போதைய அரசாங்கமேனும் கடந்தகால அரசாங்கங்களின் தோல்வி களை சீர்செய்து, நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலை நாட்டுமா? என சர்வதேச மன்னிப்புச்சபை கேள்வி எழுப்பி யுள்ளது.

இலங்கை இடம்பெற்ற மூன்று தசாப்தகால யுத்தம் முடிவு க்குக் கொண்டு வரப்பட்டு ஞாயிற்றுக்கிழமையுடன் (18) 16 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், இதுகுறித்து சர்வதேச மன்னிப்புச்சபையின் உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளத்தில் செய்யப்பட்டிருக்கும் பதிவில் மேலும் கூறப்பட்டி ருப்பதாவது:

உள்நாட்டுப்போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 16 வருடங்கள் பூர்த்தியாகும் ஞாயிற்றுக்கிழமை (18) இல் முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் ஒன்று கூடினர்.

வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் உள்ளடங்கலாக யுத்தம் இடம் பெற்ற காலப்பகுதியில் பதிவான சர்வதேச சட்டங்களுக்குப் புறம்பான மிகமோசமான மீறல் குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் இன்னமும் நீதியையும், பொறுப்புக்கூறலையும் கோரிவருகின்றனர். இருப்பினும் அத்தகைய குற்றங்கள் எவையும் இடம்பெற வில்லை என இலங்கையின் கடந்தகால அரசாங்கங்கள் மறுத்து வந்திருப்பதுடன், நம்பத்தகுந்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் தவறியிருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போதைய புதிய அரசாங்கமேனும் கடந்தகால அரசாங்கங்களின் தோல்வி களை சீர்செய்து, நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலை நாட்டுமா? அத்தோடு பாதிக்கப்பட்ட தரப்பினரின் நீதிக்கான கோரிக்கைக்கு சர்வதேச சமூகும் ஆதரவளிக்க வேண்டும் என அப்பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிள்ளையானின் மனுவுக்கு திகதி குறிப்பு!



கிழக்குப் பல்கலைக்கழக துணை வேந்தர் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு ள்ளதற்கு எதிராக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தாக்கல் செய்த அடிப் படை உரிமைகள் மனுவை ஜீன் 17 ஆம் திகதி பரிசீலிக்க உயர் நீதி மன்றம் தீர்மானித்தது.

இந்த மனு உயர் நீதிமன்ற நீதி யரசர்களான மஹிந்த சமயவர்தன மற்றும் மேனகா விஜேசுந்தர ஆகியோர் அடங்கிய அமர்வு முன் பரிசீலிக்கப் பட்டது. பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தாக்கல் செய்த மனுவில், சி.ஐ.டியின் சிறப்பு புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி, சி.ஐ.டியின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமேஷா முத்துமாலி, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பாதுகாப்பு அமைச்சர் அனுர திசாநாயக்க மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதி களாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன் னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவ சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப் பட்டு காணாமல் போனது தொடர்பாக மட்டக்களப்பில் உள்ள தனது கட்சி அலுவலகத்தில் அரசியல் நடவடிக்கை களில் ஈடுபட்டிருந்த போது ஏப்ரல் 8 ஆம் திகதி அங்கு வந்த குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளால் தான் கைது செய்யப்பட்டதாக மனு தாரர் கூறுகிறார். பாதுகாப்பு அமை ச்சர் அனுர திசாநாயக்க, அவர் மீதான விசாரணைக்காக அவரை 90 நாட்கள் தடுத்து வைக்க ஏப்ரல் 12 ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தார்.


**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# அநுரகுமார ஒடுக்குமுறை, பாகுபாட்டிற்கு தீர்வைக் காண்பார் என்ற நம்பிக்கையில் தேர்தலில் வாக்களித்த தமிழ்மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர் - மீனாக்சி கங்குலி




அனுரகுமார திசநாயக்க முன்னைய அரசாங்கங்கள் செயற்பட்ட விதத்திலிருந்து விலகி ஒடுக்குமுறை மற்றும் பாகுபாட்டிற்கு தீர்வை காண்பார் என்ற நம்பிக்கையில் கடந்த தேர்தலில் வாக்களித்த தமிழ் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பிரிவிற்கான பிரதி இயக்குநர் மீனாக்சி கங்குலி இதனை தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

கடந்த வார இறுதியில் இலங்கையில் தமிழர்கள் 1983 முதல் 2009 வரை நீடித்த உள்நாட்டு போரின் போது கொல்லப்பட்டவர்கள் காணாமலாக்கப் பட்டவர்களை நினைவுகூறுவதற்கு கடந்த 16 வருடங்களாக செய்வதை போல ஒன்று திரண்டார்கள். அவர்கள் நீதிக்கான வேண்டுகோளையும் விடுத்தார்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை குழுக்கள் பாதுகாப்பு படையினர் யுத்த குற்றங்களில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமைக்கான பெருமளவு ஆதாரங்களை வைத்திருக்கின்ற போதிலும் இலங்கையின் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் நம்பகதன்மை மிக்க பொறுப்புக்கூறல் செயற்பாடுகளை முன்னெடுக்க தவறிவிட்டனர்.

அதேவேளை தமிழ் செயற்பாட்டாளர்களும் பாதிக்கப்பட்ட சமூகத்தினரும் ஒடுக்குமுறை உட்பட ஏனைய மீறல்களை தொடர்ந்தும் அனுபவிக்கின்றனர். தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான போரில் இரு தரப்பும் பெருமளவு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர்.

விடுதலைப்புலிகளை நெருங்கிய பாதுகாப்பு படையினர் 2009 மே 18ம் திகதி அவர்களை தோற்கடித்ததை தொடர்ந்து படையினர் கொலைகள்பாலியல் வன்முறை சரணடைந்த நூற்றுக் கணக்கான போராளிகளை பலவந்தமாக காணாமலாக்குதல் போன்றவற்றில் ஈடுபட்டனர்.

புலிகளால் யுத்தசூன்ய வலயத்தில் சிக்கிக்கொண்ட மக்கள் மீது படையினர் எறிகணை தாக்குதல்களை மேற்கொண்டனர். படையினர் அவர்களை மனித கேடயங்களாக பயன்படுத்தினர்.

அனுரகுமார திசநாயக்க முன்னைய அரசாங்கங்கள் செயற்பட்ட விதத்திலிருந்து விலகி ஒடுக்குமுறை மற்றும் பாகுபாட்டிற்கு தீர்வை காண்பார் என்ற நம்பிக்கையில் கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் அவருக்கு வாக்களித்தனர். ஆனால் அவர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

காணாமல் போனோர் அலுவலகம் இழப்பீடுகளிற்கான அலுவலகம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க அலுவலகம் உள்ளிட்ட முன்னைய அரசாங்கங்களின் தோல்வியடைந்த முயற்சிகளை திசநாயக்க அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றது ஆதரிக்கின்றது.

ஆனால் இவை எந்த முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இந்த நிறுவனங்களை பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் பலர் நிராகரித்துள்ளனர்.அவர்கள் அவற்றை தோல்வியடைந்த ஒரு வாக்குறுதியாகவே பார்க்கின்றனர். இதற்கிடையில் தமிழர்களை இலக்குவைத்து நீண்ட காலமாக பயன்படுத்தப்படும் பயங்கரவாத தடுப்பு சட்டத்தை அரசாங்கம் தொடர்ந்தும் பயன்படுத்தி வருகின்றது.

ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகையை தொடர்ந்தும் தக்க வைப்பதற்காக பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாக அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு உறுதியளித்துள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை பொறுப்புக்கூறல் தொடர்பான முன்னேற்றத்தை ஐ.நா மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகம் அறிக்கையிட்டு கண்காணிக்க வேண்டும் என்றும் எதிர்கால வழக்குகளில் பயன்படுத்த சர்வதேச குற்றங்களுக்கான ஆதாரங்களை சேகரிக்க இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தை நிறுவ வேண்டும் என்றும் ஆணை வழங்கியது.. அந்த ஆணைகள் செப்டம்பரில் புதுப்பிக்கப்பட உள்ளன. இலங்கையில் முன்னேற்றம் இல்லாததால் சர்வதேச குற்றங்களைச் செய்தவர்களை பொறுப்புக்கூற வைப்பதற்கு புதுப்பித்தல் மிக முக்கியமானது. திசாநாயக்க அரசாங்கம் மனித உரிமை பேரவையின் தலையீட்டை பிளவுபடுத்தும் மற்றும் ஊடுருவும் என்று எதிர்த்துள்ளது.

மதிப்பிழந்த உள்நாட்டு முயற்சிகள் செயல்படுவதாக பாசாங்கு செய்வதற்குப் பதிலாக பொறுப்புக்கூறல் திட்டத்தை புதுப்பிப்பதற்கான தீர்மானத்தை ஆதரிப்பதன் மூலம் அரசாங்கம் பொறுப்புக்கூறலுக்கான தனது உறுதிப்பாட்டை நிரூபிக்க வேண்டும் மற்றும் இறுதியில் நீதியை வழங்குவதற்காக பாடுபட வேண்டும்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# இலங்கையில் நீதி நிலை நாட்டப்படுவதை உறுதி செய்வதற்காக கனடா சர்வதேச சமூகத்துடன் இணைந்து நிற்கும் - ஹரி சங்கரி



இலங்கையில் நீதி நிலை நாட்டப்படுவதை உறுதி செய்வதற்காக சர்வதேச சமூகத்துடனும் சர்வதேச பங்காளிகளுடனும் கனடா அரசாங்கம் இணைந்து செயற்படும் என தெரிவித்துள்ள அந்த நாட்டின் பொது பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்த சங்கரி செப்டம்பரில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் அறிக்கை தொடர்பிலும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்

கனடாவின் ஒட்டாவாவில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கனடாவின் ஒட்டாவாவில் இடம் பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் பெருமளவு தமிழ் மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

ஒட்டாவா தமிழ் சங்கம்.தேசிய தலைநகர் பிராந்திய தமிழ் சங்கம் ஒட்டாவா தமிழ் கலாச்சார மற்றும் தொழில்நுட்ப அகடமி. ஒட்டாவா தமிழ் மூத்தோர் சங்கம் தமிழ் இனப்படுகொலை நினைவுச்சின்னம் ஆகிய அமைப்புகள் இணைந்து இந்த நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

கனேடிய தேசிய கீதத்துடன் பிரெட்பாரெட் அரங்கில் ஆரம்பமான இந்த நிகழ்வில் தமிழ்தாய் வாழ்த்து பாடப்பட்டதுடன் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் இனப்படுகொலையின் போது கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் முள்ளிவாய்க்காலிலும் உயிரிழந்தவர்களிற்கு ஆழ்ந்த இரங்கல்களை வெளியிட்ட கனடாவின் பொதுபாதுகாப்பு அமைச்சர் ஆனந்த சங்கரிஒட்டவா நினைவேந்தல் நிகழ்வில் முள்ளிவாய்க்காலில் உயிர் பிழைத்தவர்கள் பிரசன்னமாகியிருப்பதாக தெரிவித்தார்.

அவர்களின் மீள் எழுச்சிதன்மை நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான அவர்களின் அசைக்க முடியாத உறுதிப்பாடு குறித்தும் அவர் தனது உரையில் தெரிவித்தார்.

ஜனவரி மாதம் இலங்கைக்கான விஜயம் குறித்து தனது உரையில் குறிப்பிட்ட ஹரி ஆனந்த சங்கரி, அங்கு முள்ளிவாய்க்காலில் உயிர் பிழைத்தவர்களை சந்தித்து உரையாடியதாக குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கில் தமிழர்கள் அமைதியாக வாழ்வதை உறுதி செய்வதற்கும்.16 வருடங்களிற்கு முன்னர் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு பொறுப்புக் கூறப்படுவதையும் உறுதி செய்வதற்கும் உயிர்பிழைத்தவர்களின் குரல்களை ஒலிக்கச் செய்வதன் அவசியத்தை ஹரி ஆனந்தசங்கரி எடுத்துரைத்தார்.

நீதி நிலை நாட்டப்படுவதை உறுதி செய்வதற்காக சர்வதேச சமூகத்துடனும் சர்வதேச பங்காளிகளுடனும் இணைந்து பணியாற்றும் கனடா அரசாங்கத்தின் நோக்கம் குறித்து குறிப் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் அறிக்கை தொடர்பிலும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் சர்வதேசசமூகத்துடன் இணைந்து செயற்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# இலங்கையின் போர்க் குற்றவாளிகளுக்கு தடை விதித்துள்ளமை குறித்து திருப்தியடைகின்றேன் பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மெர் பெருமிதம்!



இலங்கையில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு களிற்கு உள்ளான தனி நபர்களிற்கு எதிராக பிரிட்டன் சமீபத்தில் தடைகளை விதித்துள்ளமை குறித்து திருப்தியடைகின்றேன் என பிரிட்டிஷ் பிரதமர் கெய்ர் ஸ்டார்மெர் தெரிவித்துள்ளார் அறிக்கையொன்றில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கையில் யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் மற்றும் பரந்துபட்ட மனித உரிமை மீறல்களை அனுபவித்த வர்களை நினைவுகூருவதற்காக இலங்கையிலும் உலகம் எங்கிலும் உள்ள தமிழர்கள் ஒன்று திரள்கின்றனர்.

பாதிக்கப்பட்ட அனைத்து தமிழர்களையும், நினைவு கூருவதில் நான் உங்களுடன் இணைந்து கொள்கின்றேன். அந்த அநீதிகளின் கொடுமைகளின் பாதிப்புகள் நினைவுகளுடன் வாழும் உயிர் பிழைத்தவர்கள் அன்புக்குரியவர்களுடன் உடன் நிற்கின்றோம்.

சமூகங்கள் ஒன்றிணைந்து முன்னோக்கி செல்வதற்கு கடந்தகால அட்டுழியங்களை ஏற்றுக் கொள்வதும், பொறுப்புக்கூறலும் அவசியம் என்பதை நான் அறிவேன்.

குற்றமிழைத்தவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என கடந்த வருடம் நான் எழுதியிருந்தேன்.

இதன்காரணமாக இம்முறை இலங்கை யில் மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுகளிற்கு உள்ளான தனிநபர் களிற்கு எதிராக நாங்கள் சமீபத்தில் இலக்கு வைக்கப்பட்ட தடைகளை விதிக்க முடிந்தமை குறித்து திருப்தியடைகின்றேன்.

நீதி மற்றும் அமைதியை தொடர்ந்து பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை இந்த புனிதமான நாள் நினைவூட்டு கின்றது.

நீடித்த நல்லிணக்கம் மற்றும் ஸ்திரத் தன்மையை அடைவதற்கு இலங்கையின் புதிய அரசாங்கத்துடனும் இலங்கையின் வடக்குகிழக்கில் உள்ள சிவில் சமூகஅமைப்புகள் மற்றும் அரசியல் தலைவர்களுடன் இணைந்து நாங்கள் ஆக்கபூர்வமாக பணியாற்றி வருகின்றோம் எனவும் தெரிவித்துள்ளார்.

# முள்ளிவாய்க்கால் 16

முள்ளிவாய்க்கால் வழமை போல் நினைவு கூரப்பட்டிருக்கின்றது. ஒப்பீட்டடிப்படையில் அச்சமின்றி நினைவு கூரப்பட்டிருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தொடர்பில் தமிழ் மக்கள் அச்சப்படவில்லை. இதனால், மிகவும் அமைதியாக இறந்தவர்களை நினைவு கூரும் கடமையை, உயிரிழந்தவர்களின் உறவுகள் மேற்கொண்டிருக்கின்றனர்.

இதற்கு எவ்வாறான அரசியல் விளக்கங்களை முன்வைத்தாலும் கூட உயிரிழந்தவர்களை, அவர்களின் உறவுகள் நினைவு கூர்வதென்பது அவர்களைப் பொறுத்தவரையில் ஒரு உணர்வுபூர்வமான விடயம். அவர்களின் உணர்வில் அரசியல் இல்லை. வேதனைகளும், சோகமுமே அவர்களை முள்ளிவாய்க்காலுக்கு கொண்டு சேர்கின்றது.

முள்ளிவாய்க்கால் ஓர் அரசியல் செய்தி - அரசியல் அனுபவம் - உலகத்தை புரிந்து கொள்வதற்கான ஒரு பாலபாடம். ஆனால் முள்ளிவாய்க்காலிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டதற்கான அரசியல் சாட்சியாக ஒரு தமிழ் அரசியல்வாதியும் இல்லை. நாங்கள் கற்றுக் கொள்ளவே மாட்டோம் என்னும் இறுமாப்புடன் தான் தமிழ்த் தேசியத்தின் பெயரால் அரசியல் முன்னெடுக்கப்படுகின்றது.

முள்ளிவாய்கால் பேரழிவு என்பது உலகை சாட்சியாகக் கொண்டு தான் இடம் பெற்று முடிந்தது. ஒரு குறிப்பிட்ட யுத்த வலயத்திற்குள் மக்கள் ஒன்று சேரும் போது, யுத்தம் தீவிரப்படுத்தப்பட்டால் மக்கள் பெருந்தொகையாக இறப்பார்கள் என்பது, உலகம் அறியாத ஒன்றல்ல. ஐக்கிய நாடுகள் சபை பார்த்துக் கொண்டிருக்கும் போது தான் அனைத்தும் நடந்து முடிந்தது போனது.

ஐக்கிய நாடுகள் சபை பார்த்துக் கொண்டிருக்கும் போது இதற்கு முன்னரும் பேரழிவுகள் இடம் பெற்றிருக்கின்றன. அது முள்ளிவாய்க்காலை விடவும் கொடிய பேரழிவு. நூறு நாட்களில், எட்டு லட்சம் மக்கள் ருவாண்டாவில் கொல்லப்பட்ட போதும், ஐக்கிய நாடுகள் சபை வேடிக்கை தான் பார்த்துக் கொண்டிருந்தது. கௌதமாலாவில் இரண்டு லட்சம் மாயன் பழங்குடி மக்கள் கொல்லப்பட்டபோதும், ஐக்கிய நாடுகள் சபை வேடிக்கை தான் பார்த்துக் கொண்டிருந்தது. இந்தப் பின்புலத்தில், ஐ.நா முள்ளிவாய்க்காலில் வேடிக்கை பார்த்ததில் என்ன ஆச்சரியமுண்டு.

ஏற்கனவே தோற்றுப் போன ஐக்கிய நாடுகள் சபை முள்ளிவாய்க்காலிலும் மீண்டுமொரு அதன் தோல்வியை பதிவு செய்தது - அந்த வகையில் முள்ளிவாய்க்கால் மனித அவலங்களின் முதல் இடமும் அல்ல, கடைசி இடமும் அல்ல. அந்தக் கடைசி இடம் எதுவென்பதை எவரும் அறியார். ஏனெனில் உலகம் பல போர்களுக்கு இப்போதும் தயாராகவே இருக்கின்றது. ஏனெனில் உலகம் அதிகாரப் போட்டியின் பலிபீடம். இன்னொரு வகையில் கூறுவதானால் உலக அரசியல் என்பது வெற்றிக்கான சூதாட்ட மேடை. அங்கு வெற்றிக்கு விதிகள் கிடையாது.

ஒப்பாரிகள், ஆவேசங்கள், கருணை மனுக்கள் எவையும் இந்தச் சூதாட்டத்திற்கு முன்னால் பெறுமதியற்றவை. முள்ளிவாய்க்கால் தமிழர்களுக்கு உணர்த்தியிருக்கும் பேருண்மை இது தான். ஆனால் இந்தப் பேருண்மையை புரிந்து கொண்டு தங்களை தயார் செய்து கொள்ளும் ஓர் இனக் கூட்டமாக ஈழத் தமிழர்கள் இல்லை. இது தான் கடந்த பதினைந்து வருடகால அரசியல் அனுபவம். கற்றுக் கொள்ள மறுத்தால், இனியும் இந்த நிலைமை தொடரும். ஆண்டுகள் தோறும், அழுது விட்டுச் செல்வதாக, முள்ளிவாய்க்கால் நினைவுகளும் நீளும். ஒரு கட்டத்தில் வெறும் சடங்காச்சாரமான விடயமாக சுருங்கிப் போகும்.

நாசிகளால் சிதைகப்பட்டு, சின்னாபின்னமாக்கப்பட்ட யூதர்களின் கதைகளை, முள்ளிவாய்க்கால் நினைவோடு ஒப்பிடுவதை ஒரு அரசியலாக்க சிலர் முயற்சிக்கலாம். ஆனால் யூதர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய ஓர் அடிப்படையான தந்திரப் பாடத்தை எவருமே தமிழ்ச் சூழலில் கூறுவதில்லை - அது என்ன? சிதறிடிக்கப்பட்ட யூதர்கள் மீண்டும் நிமிரும் வரலாற்றுப் பயணத்தில், ஒரு பலவான் நண்பனை சம்பாதித்துக் கொண்டனர். அதுவே அவர்களின் பலமானது. ஈழத் தமிழர்களுக்கான பலவான் நண்பன் யார்? அவ்வாறான ஒரு நண்பனை சம்பாதித்துக் கொள்ள ஏன் தமிழர்களால் முடியவில்லை?

# தமிழ்க்கட்சிகள் மாகாணசபைத் தேர்தலைக் கோர வேண்டும்! அநுராவின் புதிய அரசியலமைப்பு சூழ்ச்சிக்குள் சிக்கக் கூடாது!



உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் வடக்கு, கிழக்கில் தமிழ்க் கட்சிகள் மீளெழுச்சி அடைந்துள்ள நிலையில் நீண்டகாலமாக நடைபெறாதிருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்குரிய கோரிக்கைகளையும் அழுத்தங்களையும் கூட்டிணைந்து கோரவேண்டும் என்று அரசியல் ஆய்வாளரும் இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக்க வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் போன்று நாட்டில் தேசிய பிரச்சினையொன்று இல்லையென்ற நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவும் பயணிக்கின்ற நிலையில் புதிய அரசியலமைப்பை உருவாக்கப 'போவதாக அவர் கூறும் சூழ்ச்சிக்குள் எழுச்சி பெற்றுள்ள தமிழ்க் கட்சிகள் சிக்கி விடக்கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னரான சூழலில் வட, கிழக்கு மற்றும் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் சம்பந்தமாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2024இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் அதன் பின்னரான பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றில் வடக்கு, கிழக்கில் தமிழ்க் கட்சிகளுக்கு முன்னெப் போதும் இல்லாதவாறான பின்னடைவுகள் ஏற்பட்டிருந்தன. ஆனால் கடந்த மே 6ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் ஜனாதிபதி அநுர குமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தியை வட, கிழக்கு மக்கள் தூக்கி எறியச் செய்துளுபவ் தமிழ்க் கட்சிகள் வாக்கு வங்கி ரீதியாகவும் மக்களின் ஆதரவுத் தளத்திலும் மீளெழுச்சி அடைந்திருக்கின்றன.

மிகக் குறுகிய காலத்தில் தமிழ்க் கட்சிகளின் மீளெழுச்சியானது ஜனநாயகத் தளத்தில் அரியதொரு சாதனையாகவே பார்க்க வேண்டியுள்ளது. இந்த சாதனையை நிகழ்த்துவதில் சுமந்திரன் சாணக்கியன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சித்தார்த்தன் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட பல நீண்டகால அனுபவமிக்க தமிழ்த் தலைவர்களின் பங்களிப்பு காத்திரமானது.

தேர்தலுக்கு முன்னதாக இலங்கை இந்திய கூட்டு உரையாடலில் (அநுர–மோடி சந்திப்பு) அதிகாரப் பகிர்வுக்கான கோரிக்கை மறைந்து போயுள்ளதை தமிழ்த் தலைவர்கள் நிச்சயமாக அவதானித்திருப்பார்கள். இலங்கை அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்கு அமைவாக டில்லியால் அந்த விடயம் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மறுபுறத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான சீர்திருத்தவாத தீர்வினை முன்வைப்பதற்கு பதிலாக, போலியான மார்க்சிய வாதத்தினை மீளப் புதிப்பிக்கும் நடவடிக்கைகளையே முன்னெடுத்துள்ளார்.

அனைவருக்கும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளே இருக்கின்றன என்ற சிந்தனையையும்ளுபவ் தோல்வியடைந்த தென்னிலங்கை அரசியல் வாதிகளின் பேரினவாதப் போக்கில் தேசியப் பிரச்சினையொன்று இல்லையென்ற சிந்தனையையும் அநுர தலைமையிலான அரசாங்கம் வெளிப்படுத்துகின்றது.

அதிகாரப் பகிர்வின் ஆரம்பமாக இருக்கின்ற மாகாண சபைகளுக்கான தேர்தலுக்கான காலக்கெடுவை அறிவிக்காது சட்டத்தில் காணப்படுகின்ற பிரச்சினையை தீர்ப்பதற்காக சுமந்திரன் முன்மொழிந்த தனிநபர் பிரேரணையை முன்னகர்த்துவதற்கு பதிலாக காலம் தாழ்த்துகின்ற செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன. இந்த நிலைமையானது மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதில் அரசாங்கத்துக்கு காணப்படுகின்ற ஈடுபாடற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றது.

அந்த வகையில் பார்க்கும் போது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வழியிலேயே அநுர குமாரவும் பயணிக்கின்றமை தெளிவாக புலனாகின்றது. அது மட்டுமன்றி இந்தியாவுக்கு மூலோபய இடங்களை வழங்குவதன் ஊடாக அதிகாரப்பகிர்வு தேசியப் பிரச்சினை விடயங்களில் அந்நாடு கொண்டிருந்த நடுநிலையாளர் வகிபாகத்தை நீக்கச் செய்கின்ற கோட்டாபய–மொரகொட' சூத்திரத்தினை அநுரவும் பயன்படுத்துகின்றார்.

அவ்வாறான நிலையில் வட, கிழக்கில் எழுச்சி அடைந்துள்ள தமிழ்க் கட்சிகள் உடனடியாக மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான கோரிக்கைகளையும், அழுத்தங்களையும் வழங்க வேண்டும். அதற்கு தென்கின் ஆதரவினையும் அவர்களால் பெற்றுக்கொள்ள முடியும்.

அவ்வாறில்லாது, அநுரகுமாரவின் புதிய அரசியலமைப்புச் சூழ்ச்சிக்குள்ளோ, ஒற்றையாட்சியை நீக்கும் பழைமை வாத கோசத்துக்குள்ளோ சிக்கிக் கொண்டால் அவர்களுக்குள் பிளவுகள் ஏற்படும். அந்தப் பிளவுகள் தமிழ்த் தலைவர்கள் தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக் கொள்கின்ற பின்னடைவாகவே இருக்கும்.

அது மட்டுமன்றி, அவர்களின் மீளெழுச்சி வீணாகப் போவதோடு, அதிகாரப்பகிர்வுக்கான நீண்டகால முயற்சிகளும் வீணடிக்கப்பட்டு அரசியல் ரீதியான முடக்க நிலைமையை அநுர அரசாங்கம் ஏற்படுத்திவிடும் ஆபத்தான சூழலே எஞ்சியதாக இருக்கும் என்றார்.

# வெளிநாட்டுத் தடைகள் காரணமாக என்னால் தென்னாசிய நாடுகளுக்குக் கூட போக முடியவில்லை - சவேந்திரா கவலை



2009ம் ஆண்டின் பின்னர் இலங்கையை ஆண்ட ஆட்சியாளர்கள் ஆதாரமற்ற யுத்த குற்றச்சாட்டுகளை எதிர் கொள்வதில் தோல்வியடைந்துள்ளனர் என இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு படை பிரதானியும் இராணுவதளபதியும் இறுதி யுத்தத்தில் 58 வது படைப்பிரிவின் தளபதியாக பணியாற்றியருவமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கங்களின் இந்த தோல்வி விடுதலைப்புலிகளிற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்ட சிரேஸ்ட இராணுவ அதிகாரிகள் உலக நாடுகளின் தண்டனைகளை எதிர்கொள்ளும் நிலையை உருவாக்கியுள்ளது என சவேந்திர சில்வா தொலைக்காட்சி பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

சவேந்திரசில்வா இந்த பேட்டியில் அரசாங்கங்கள் அரசியல் ரீதியில் இந்த பிரச்சினைகளிற்கு தீர்வை காண தவறியுள்ளமை குறித்து தனது சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

2020 பெப்ரவரியில் தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் எதிராக அமெரிக்கா விதித்த தடைகள் குறித்தும் மார்ச் மாதம் பிரிட்டன் விதித்த தடைகள் குறித்தும் கருத்து தெரிவித்துள்ள அவர் அமெரிக்கா பிரிட்டன் தடைகளால் தான் தென்னாசியாவிற்கு கூட பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளிற்கு எதிரான இறுதி யுத்தத்தில் போரிட்ட அதிகாரியின் மகளான யொகானி சில்வாவின் லண்டன் நிகழ்ச்சிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் குறித்து சவேந்திர சில்வா சுட்டிக் காட்டியுள்ளார்.

மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ்,மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண,மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த, மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வா,சக்கி கலகே உட்பட படைப்பிரிவுகளிற்கு தலைமை வகித்தவர்கள் சர்வதேச சமூகத்தின் தண்டனை நடவடிக்கைகளை எதிர் கொண்டுள்ளனர் என சவேந்திரசில்வா தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதையும் மக்கள் விடுவிக்கப்பட்டதையும் நிச்சயம் கொண்டாட வேண்டும் என தெரிவித்துள்ள அவர் முடிவிற்கு கொண்டு வர முடியாது என பலர் நினைத்த யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வருவதற்காக ஆயுதப்படையினரும் பொலிஸாரும் பெரும் விலையை செலுத்தினார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இன்னமும் முதலாம் உலக யுத்த இரண்டாம் உலக யுத்த வெற்றிகளை கொண்டாடுகின்றது இதன் காரணமாக இந்த யுத்த வெற்றியை கை விடுவது அர்த்தமற்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக சுமந்திரன்?



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்கபோவதாக அக்கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் அறிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினாக இருக்கும் சிவஞானம் சிறீதரன், தான் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடமாட்டார் என ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராகத் தான் போட்டியிட போவதாக சுமந்திரன் கூறியுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர்களை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்கள் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளதாக சந்திப்பில் கலந்து கொண்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத்தலைவர்களில் ஒருவரான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது அடுத்து வரும் மாகாண சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராகத் தானே களமிறங்கப் போகின்றார் என்று சுமந்திரன் எங்களிடம் கூறினார் என்றும் உள்ளூராட்சி சபைகளில் ஒன்றிணைந்து ஆடசியமைப்பது குறித்து இந்தச் சந்திப்பில் பேசப்பட்டாலும் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்குவது தொடர்பில் எதுவும் பேசவில்லை. என்று சித்தார்த்தன் மேலும் கூறியுள்ளார்.

# ஞானசார தேரரை மிரட்டுகிறதாம் லிபிய கடாபி குழுமம்?



சில வாரங்களுக்கு முன்பு கிழக்கு மாகாணத்தின் ஏறாவூரில் வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையில் கலந்து கொண்ட வழிபாட்டாளர்களிடையே ஏராளமான அச்சுறுத்தும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதாக பொதுபல சேனா (பிபிஎஸ்) பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் குற்றம் சாட்டினார்.

ஊடகங்களுக்கு உரையாற்றிய தேரர் காசிம் என்ற இளைஞன் மற்றும் பலரை ஷரியா சட்டத்தின்படி கல்லெறிந்து விசாரணை செய்து மரணதண்டனை நிறைவேற்ற வேண்டும் என்று அந்த துண்டுப்பிரசுரங்கள் கோருவதாகக் கூறினார்.

இலங்கையில் இஸ்லாமிய தீவிரவாதம் பரவுவது தொடர்பான சமீபத்திய வெளிப்பாடுகளுக்கு பதிலளிக்கும் விதமாக இந்த அச்சுறுத்தல்கள் விடுக்கப ்பட்டதாக அவர் கூறினார், மேலும் இது உலகளாவிய பயங்கரவாத வலையமைப்புகளுடன் தொடர்புடையதாகக் கூறப்படுகிறது.

அச்சுறுத்தல்கள் குறித்து பாதுகாப்பு செயலாளருக்கு எழுத்துப்பூர்வமாக அதிகாரப்பூர்வமாக அறிவித்ததாக தேரர் கூறினார். இந்த நிலைமை நாட்டிற்குள் தீவிரவாத நடவடிக்கைகள் மற்றும் மத பதட்டங்களில் ஆபத்தான அதிகரிப்புக்கு சான்றாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

தீவிரவாத ஒடுக்கு முறையால் பாதிக்கப்பட்ட அந்தப் பகுதியில் உள்ள பாரம்பரிய முஸ்லிம் சமூகத்தினர் உதவிக்காக தம்மைத் தொடர்பு கொண்டதாக அவர் மேலும் கூறினார். தீவிரவாதக் கூறுகள் பற்றிய தகவல்களை இந்தச் சமூக உறுப்பினர்கள் தமக்கு வழங்கியதாகவும், அதை பொதுமக்களுக்கு வெளியிடுமாறும் அவர்கள் கேட்டுக் கொண்டதாகவும் ஞானசார தேரர் கூறினார்

'லிபியா கடாபி குழு' என்று தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் ஒரு குழு, தீவிரவாத சித்தாந்தங்களை எதிர்ப்பதாகக் குற்றம் சாட்டும் நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, வட்ஸ்அப் வழியாக அச்சுறுத்தும் செய்திகளைப் பரப்பியதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

ஞானசார தேரர், ஏறாவூர் 01, வலியப்பு தைக்கா வீதியை சேர்ந்த முகமது பாரூக் முகமது ஃபௌசுல் என்ற ஒரு நபரின் பெயரைக் குறிப்பிட்டு, அவர் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டினார், மேலும் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு அறிக்கைகள் வழங்கப்பட்ட போதிலும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் கூறினார்.

ஏராவூ ரில் நிலவும் நிலைமை மிகவும் கவலையளிக்கிறது," என்று தேரர் மேலும் விளக்கினார், உள்ளூர் சூஃபி முஸ்லிம்கள் கடுமையான பாதுகாப்பின் கீழ் மசூதிகளுக்குச் செல்வதாகக் கூறப்படுகிறது. தீவிரவாத குழுக்களுக்கு எதிரான எதிர்ப்பிற்காக அறியப்பட்ட ஏறாவூரில் உள்ள சூஃபி சங்கத்தின் செயலாளர் காசிம் காத்தான்குடி, அமைதியை விரும்பும் முஸ்லிம்களுக்கு எதிரான அதிகரித்து வரும் அச்சுறுத்தல்கள் குறித்து விவாதிக்க தன்னைச் சந்தித்ததாக அவர் கூறினார்.

தீவிரவாத குழுக்களால் திட்டமிடப்பட்ட பெரிய பேரழிவுகள் என்று அவர் விவரித்தவற்றைத் தடுப்பதில் 2013 முதல் தனது சொந்த பங்கை நினைவு கூர்ந்த ஞானசார தேரர், தான் தொடர்ந்து குறிப்பிடத்தக்க தனிப்பட்ட ஆபத்தை எதிர் கொள்வதாகக் கூறினார். போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளை தாம் பலமுறை கோரிய போதிலும் அவை வழங்கப்படவில்லை என்று அவர் வலியுறுத்தினார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள புலனாய்வுப் பிரிவுகளுக்குள் இருக்கும் சில முஸ்லிம் அதிகாரிகள், மதக் கடமைகளைக் காரணம் காட்டி உயர் அதிகாரிகளுக்குத் துல்லியமான தகவல்களைத் தெரிவிக்கத் தவறிவிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இந்த இஸ்லாமிய தீவிரவாதம் ஒரு அரசாங்கத்திற்கு அச்சுறுத்தல் அல்ல, ஆனால் முழு நாட்டிற்கும் அச்சுறுத்தல் என்று தேரர் எச்சரித்தார். மிகவும் ஆபத்தான சித்தாந்த ஜிஹாதிகள் இப்போது அரசாங்கத்தையும் பாதுகாப்புப் படைகளின் சில கூறுகளையும் செல்வாக்கு செலுத்தி வருகின்றனர். அதிகாரத்தில் இருப்பவர்கள் அவர்களிடமிருந்து ஆலோசனையைப் பெற்றால் நாங்கள் உண்மையிலேயே உதவியற்றவர்களாக தான் இருக்கிறோம், என்று அவர் மேலும் கூறினார்.

ஞானசார தேரர் தனக்கு முன்னர் அதிரடிப்படை பாதுகாப்பு ஒதுக்கப்பட்டிருந்ததாகவும் ஆனால் அதை தானாக முன்வந்து அதிகாரிகளிடம் திருப்பிக் கொடுத்ததாகவும் கூறினார். அதன் பின்னர், பாதிக்கப்பட்ட பாதுகாப்புப் பிரிவு மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் எழுதி, எம்.எஸ்.டி (அமைச்சர் பாதுகாப்புப் பிரிவு) பாதுகாப்பை பொருத்தமானதாகக் கோரியுள்ளார். இந்தக் கூற்றுக்களுக்கு அதிகாரிகள் இன்னும் அதிகாரபூர்வமாக பதிலளிக்கவில்லை எனத் தெரிகின்றது.

# தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சுமந்திரன் தான் - சி வி கே



தமிழரசுக் கட்சியின் பதில் பொது செயலாளர் சுமந்திரன் தான் ஸ்ரீதரன் உணர்ந்து கொள்ள வேண்டும் என்கிறார் சி.வி.கே.

தமிழரசுக் கட்சியின் பதில் பொது செயலாளர் சுமந்திரன் தான். அவரே கட்சியின் இன்றைய கால அனைத்து செயற்பாடுகளுக்கும் கையொப்பமிடும் அதிகாரம் மிக்கவர். இதனை ஸ்ரீதரன் உணர்ந்து கொள்ள வேண்டும் என தமிழரசுக் கட்சியின் பிரதித் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளின் தவிசாளர் உப தவிசாளர் நியமன சர்ச்சை தொடர்பில் சி.வி.கே. சிவஞானம் விளக்கமளித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் தான். அவரே கட்சியின் இன்றைய கால அனைத்து செயற்பாடுகளுக்கும் கையொப்பமிடும் அதிகாரம் மிக்கவர்.

கட்சியின் மத்திய செயற் குழுவுக்கு அதிகாரம் இருக்கின்றது. அதன்படி கட்சியில் வறிதாகும் பதவி நிலைகளுக்கு மத்திய செயற்குழு உறுப்பினர்களை நியமிக்கும். அதன்படியே இன்றைய பதவி நிலை நியமனங்கள் செய்யப்பட்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதை ஸ்ரீதரன் உணர்ந்து கொள்ள வேண்டும்

இதனிடையே உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சி அமைப்பு தொடர்பில் பல கட்சிகளுடன் பேசியிருக்கின்றோம்.

அதற்கு தேசியத்தை நேசிக்கும் கட்சிகள் ஓரணியில் நின்று தேசியக் கட்சிக்கு இடங்கொடுக்காத வகையில் ஆட்சி அதிகாரத்தை தமிழ் தரப்பினர் கையகப்படுத்தும் வகையில் அமைவதற்கு பங்களிக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுகின்றேன்.

நான் ஆட்சி செய்வது தொடர்பில் தமிழ் தரப்பிலுள்ள கட்சிகளுடன் பேசியுள்ளேன். அதன்படி இன்று எமது தேசியப் பரப்பில் இருக்கும் கட்சித் தலைவர்களுக்கும் குறிப்பாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உள்ளிட்ட ஏனைய தரப்பினரது ஆதரவு கிடைக்கும் என்று நம்புகின்றேன்.

இதேவேளை ஏனையோர் கூறுவது போன்று எமது கட்சி எந்தவொரு ஒற்றுமை இணக்கப்பாட்டையும் குழப்பியது கிடையாது என்றும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# விடுதலைப்புலிகள் பயங்கரவாத அமைப்பிடம் இருந்து தாயகத்தை விடுவித்த வீரர்களுக்கு அஞ்சலி - சஜித்

கொடூரமான 30 ஆண்டுகால போரை முடிவுக்குக் கொண்டு வந்து தாயகத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பயங்கரவாத அமைப்பிடமிருந்து விடுவித்து 16 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. தாய் நாட்டுக்காக தமது உயிரை தியாகம் செய்த, அங்கவீனமுற்ற சகல பாதுகாப்பு படை வீரர்களுக்கும் அஞ்சலி செலுத்துவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

16ஆவது தேசிய போர் வீரர் நினைவு நாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 30 ஆண்டுகால கொடூரமான போரை முடிவுக்குக் கொண்டு வந்து, வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு மற்றும் மத்திய மலைநாட்டை ஒரே கொடியின் கீழ் ஒன்றிணைத்து, நமது தாயகத்தையும் மக்களையும் கொடூரமான புலி பயங்கரவாத அமைப்பிலிருந்து விடுவித்து இன்றுடன் 16 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

இந்த நோக்கத்திற்காக தங்கள் கண்கள், காதுகள், சதை, இரத்தம், வியர்வை மற்றும் தங்கள் உயிரைக் கூட தியாகம் செய்த அனைவருக்கும், இராணுவம், விமானப்படை, கடற்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படைகளின் மாவீரர்கள் மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகள் உட்பட அனைவருக்கும்



நாம் அஞ்சலி செலுத்த வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதே சஜித் பிரேமதாசாவைத் தான் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் ஆதரித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் இடம் பெற்றது இன அழிப்பு! ராஜபக்ஷ அரசின் யுத்தக் குற்றங்களை மறக்கக் கூடாது - கனடா கொன்சவேர்ட்டிவ் கட்சி

இலங்கையில் இடம் பெற்றது படுகொலைகள் மாத்திரமல்ல இனஅழிப்பு என தெரிவித்துள்ள கனடாவின் கென்சவேர்ட்டிவ் கட்சி தலைவர் பியர் பொலியியர ராஜபக்ச அரசாங்கத்தின் யுத்த குற்றங்களை ஒருபோதும் மறக்கக் கூடாது. அந்த குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தண்டனையின்றி தப்ப அனுமதிக்க கூடாது என தெரிவித்துள்ளார்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது வரலாற்றை திரும்பிப் பார்க்கும் அனைவரும் பெருமிதமான தருணங்களையும் வலி மிகுந்த தருணங்களையும் நினைவு கூருவார்கள்.



தமிழ் இனப்படுகொலை நினைவு நாளில் கடந்த நூற்றாண்டின் மிகப் பெரிய துயரங்களில் ஒன்றான தமிழ் இனப்படுகொலை குறித்து எங்கள் எண்ணங்களை திருப்புகின்றோம்.

பல தசாப்தங்களாக இலங்கை வன்முறையாலும் இரத்தக் களறியாலும் பாதிக்கப்பட்டது, ஏற்கனவே பல வருடங்களாக துயரங்களை அனுபவித்த நிலையில் 2009 மே மாதம் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டமை ,தனித்துவமான பயங்கரம் மற்றும் ஈவிரக்கமற்ற தன்மை ஆகியவற்றின் தருணமாகும்.

இது வெறுமனே படுகொலையில்லை இது இனஅழிப்பு 16 வருடங்களிற்கு பின்னர் பாதிக்கப்பட்டவர்களை நாங்கள் நினைவு கூருகின்றோம், நீதிக்கான அவசர தேவையை அங்கீகரிக்கின்றோம்.

ராஜபக்ச அரசாங்கத்தின் யுத்த குற்றங்களை ஒருபோதும் மறக்ககூடாது. அந்த குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தண்டனையின்றி தப்ப அனுமதிக்க கூடாது. கனடா வலுவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், பொறுப்புக்கூறலை கோரவேண்டும்.

கனடா யுத்த குற்றவாளிகளிற்கான புகலிடமாக ஒருபோதும் விளங்கக் கூடாது. தமிழ் இனப்படுகொலைக்கு காரணமானவர்கள் உண்மையான விளைவுகளை அனுபவிப்பதை உறுதி செய்வதற்கு கென்சவேர்ட்டிவ் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கும்.

கனடாவில் உள்ள தமிழ் சமூகம் நம்ப முடியாத மீள் எழுச்சி தன்மையை வெளிப்படுத்தியுள்ளது வேதனையை வலிமையாக மாற்றியுள்ளது, எங்கள் நாட்டை வளப்படுத்தியுள்ளது.

இந்த இனப்படுகொலையில் பாதிக்கப்பட்டவர்களை நாங்கள் நினைவுகூரும் இந்த தருணத்தில் அனைவருக்கும் நீதி மற்றும் சமாதானத்திற்கான எங்கள் அர்ப்பணிப்பை மீளவலியுறுத்துகின்றோம்.


எங்கள் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் ராஜபக்ச அரசாங்கத்தை எதிர்த்து நின்றார் என்பது குறித்து நான் பெருமிதம் அடைகின்றேன்.

நான் ராஜபக்ச அரசாங்கம் தங்கள் குற்றங்களிற்காக பதில் கூருவதை உறுதி செய்வதற்காக தொடர்ந்தும் போராடுவேன், சர்வதேச நீதிமன்றத்தில் அவர்களை பாரப்படுத்தும் நடவடிக்கைகளை எடுப்பேன் என்றார்.

## அமெரிக்காவில் யூத அருங்காட்சியகத்திற்கு வெளியே இரண்டு பேர் சுட்டுக் கொலை

21 மே 2025 புதன்கிழமை இரவு அமெரிக்காவின் தலைவநகர் வாஷிங்டனில் உள்ள யூத அருங்காட்சியகத்திற்கு வெளியே இஸ்ரேலிய தூதரகத்தின் இரண்டு ஊழியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பாதிக்கப்பட்ட இரண்டு ஆண் மற்றும் பெண், அருங்காட்சியகத்தில் ஒரு நிகழ்வை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த போது, 30 வயது சந்தேக நபர் நான்கு பேர் கொண்ட குழுவை அணுகி துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பெருநகர காவல்துறைத் தலைவர் பமீலா ஸ்மித் ஒரு செய்தி மாநாட்டில் தெரிவித்தார்.

சந்தேக நபர் நிகழ்வு பாதுகாப்பு அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டார் என்று ஸ்மித் கூறினார். அவர் காவலில் எடுக்கப்பட்ட போது அந்த நபர் 'சுதந்திரம், சுதந்திர பாலஸ்தீனம்' என்று கோஷமிடத் தொடங்கினார் என்று ஸ்மித் கூறினார். சந்தேக நபருக்கு காவல்துதுறையினருடன் எந்தக் குற்றங்களும் இதற்கு முன்பு செய்த எந்த தொடர்பும் இல்லை என்றும் அவர் மேலும் கூறினார்.


வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# இராணுவ வெற்றி விழாவில் ஜனாதிபதி அநுர பேசியது அரசியல் சர்ச்சையாவது ஏன்?



இலங்கையில் உள்நாட்டு போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு 16 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் இம்முறை நடத்தப்பட்ட இராணுவ வெற்றி நிகழ்வு அரசாங்கத்திற்கு அரசியல் ரீதியில் பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

உள்நாட்டு போரை வெற்றிக் கொள்வதற்காக 27,000 – த்திற்கும் அதிகமான இராணுவத்தினர் உயிர் நீத்துள்ளதாக அரசாங்கம் கூறுகின்றது. இவ்வாறு நாட்டிற்காக உயிர்நீத்த இராணுவத்தை கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஒவ்வொரு ஆண்டும் இலங்கை அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

இராணுவ வெற்றி கொண்டாட்ட நிகழ்வு ஒவ்வொரு ஆண்டும், ஜனாதிபதித் தலைமையில் நடைபெறுகின்ற நிலையில் இம்முறை பாதுகாப்பு பிரதி அமைச்சர் தலைமையில் நடைபெறும் என இராணுவ சேவை அதிகார சபையின் தலைவர் ஓய்வு பெற்ற பிரிகேடியர் சௌரத் கோஹோணை கடந்த 16ம் தேதி ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்திருந்தார்.

2009ம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டு வரப்படும் சந்தர்ப்பத்தில் அதற்கான கட்டளையிட்ட, இந்த நாட்டில் தற்போது உயர்நிலையிலுள்ள மூன்று மார்ஷல்களும், அதே போன்று ஜனாதிபதியை பிரதிநிதித்துவப்படுத்தி, பாதுகாப்பு பிரதி அமைச்சரும் இந்த நிகழ்வில் கலந்துக் கொள்ளவுள்ளனர்.''

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இந்த நிகழ்வில் கலந்துக் கொள்ளவில்லை என அறிவிக்கப்பட்ட பின்னணியில், அது தொடர்பில் நாட்டில் மக்கள் மத்தியில் சர்ச்சையாக நிலைமை தோன்றியிருந்தது. இந்த நிகழ்வானது, ஜனாதிபதி தலைமையில் நடைபெற வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விட ஆரம்பித்திருந்தனர்.

நான் அவரின் தனிப்பட்ட ரீதியில் கோரிக்கையொன்றை முன் வைக்கின்றேன். அவரது வேலைப் பளுவான வாழ்க்கையில் ஐந்து நிமிடங்களை இந்த நிகழ்விற்காக ஒதுக்கிடுமாறு நான் கோரிக்கை விடுக்கின்றேன். அனைத்து இராணுவத்திற்காகவும் வழங்கப்படும் கௌரவமாக நாம் இதனை பார்க்கின்றோம்.'' என இலங்கை கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் ரியல் அட்மிரல் (ஓய்வு பெற்ற) டி.கே.பி.தஸநாயக்க தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், இராணுவ வெற்றி கொண்டாட்ட நிகழ்வானது, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நடைபெறும் என கடந்த 18ம் தேதி ராணுவ சேவை அதிகார சபையின் தலைவர் ஓய்வு பெற்ற பிரிகேடியர் சௌரத் கோஹோணை மீண்டும் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

இராணுவ வீரர்களை கௌரவிக்கும் வகையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கலந்து கொள்ளவுள்ளார். அதே போன்று பாதுகாப்பு பிரதி அமைச்சர், மூன்று மார்ஷல்களும் இந்த நிகழ்வில் கலந்துக்கொள்கின்றனர்' என ராணுவ சேவை அதிகார சபையின் தலைவர் ஓய்வு பெற்ற பிரிகேடியர் சௌரத் கோஹோணை குறிப்பிட்டிருந்தார்.

### அநுர பேசியது என்ன?

இதன்படி கடந்த 19ம் தேதி நடைபெற்ற ராணுவ வெற்றி கொண்டாட்ட நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கலந்துக் கொண்டு பேசினார். இந்த போரை முடிவுக்கு கொண்டு வருவதற்காக எமது படையினர் பெரும்பாலானோர் தமது உயிரை தியாகம் செய்துள்ளனர். இந்த பெயர் பலகை நிரம்புவதற்கு அவர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதேபோன்று பெரும்பாலானோர் நிரந்த மாற்றுத்திறனாளிகளாக மாறியுள்ளனர். இந்த நாடு அவர்களுக்கு எப்போதும் கடன்காரர்கள் தான்.' என்று கூறினார் அநுர குமார திஸாநாயக்க.

மேலும், இந்த பெயர் பலகையில் தனது மகனின் பெயர் இருக்கின்றதா?, தனது கணவரின் பெயர் இருக்கின்றதா? தனது தந்தையின் பெயர் இருக்கின்றதா? என்பதை விரல் விட்டு தேடுவதை நான் அவதானித்தேன். தெற்கில் மாத்திரமா, இல்லை வடக்கிலும் அவ்வாறே தேடுகின்றனர். தனது பிள்ளைகள், தனது கணவரை இழந்தோர் புகைப்படங்களை வீதிகளில் வைத்துக்கொண்டு தனது கணவர், பிள்ளைகள் தொடர்பில் கேள்வி எழுப்புகின்றனர். அனைத்து பெற்றோருக்கும் தனது பிள்ளை ஒரு இரத்தினக்கல். அதிகாரத்திற்காக வடக்கிலும், தெற்கிலும் தமது பிள்ளைகள் பலிகொடுக்கப்பட்டுள்ளனர்.

அதிகாரத்திற்காக ஒன்றுமே அறியாதோரின் பிள்ளைகள் பலிகொடுக்கப்பட்டனர். தெற்கிலும் சரி, வடக்கிலும் சரி. அவ்வாறே இடம்பெற்றது. அனைத்து படையினரதும் கைகளிலுள்ள துப்பாக்கி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் செயற்படக்கூடாது என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாக காணப்படுகின்றது' என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டார்.

### வெளிவிவகார அமைச்சர் கருத்து

ஜனாதிபதி ராணுவ வெற்றி நிகழ்வில் கலந்து கொண்டமை குறித்து வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் தனியார் ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டிருந்தார். ஜனாதிபதி முதலில் இருந்தே இந்த நிகழ்வில் கலந்து கொள்ள தீர்மானித்திருந்தார். ஏற்பாடுகள் மாத்திரம் பிரதி பாதுகாப்பு அமைச்சர் தலைமையில் நடைபெற்று வருவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதற்காகவே பிரதி பாதுகாப்பு அமைச்சர் தலைமையில் நிகழ்வு நடைபெறுகின்றது என முதலில் செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது. கருத்து வெளியிடும் போது ஏற்பட்ட பிரச்சனையே இதற்கான காரணம். ஜனாதிபதி இந்த நிகழ்வில் கலந்துக் கொள்ள முதலிலேயே தீர்மானித்திருந்தார் என வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் குறிப்பிட்டிருந்தார்.

### எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு!

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, ராணுவ வெற்றி நிகழ்வில் கலந்துக்கொள்ள முதலில் மறுப்பு தெரிவித்து, பின்னர் நிகழ்வில் கலந்துக்கொண்டமை குறித்து எதிர்க்கட்சிகள் செய்தியாளர் சந்திப்புகளை ஏற்பாடு செய்து தமது எதிர்ப்புகளை வெளியிட்டிருந்தனர்.

பிவித்துறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில, ''விடுதலைப் புலி ஆதரவாளர்கள் கோபமடைவார்கள் என்ற அச்சத்தினால், ஜனாதிபதி ராணுவ வெற்றி தேசிய நிகழ்வை புறக்கணிக்க தீர்மானித்திருந்தாலும், தேசபற்றாளர்களினால் வெளியிடப்பட்ட எதிர்ப்புகள் காரணமாக ஏற்பட்ட கடும் அழுத்தத்தினால் விருப்பமில்லையேனும், இராணுவ வெற்றி நிகழ்வில் கலந்துக் கொள்ள வேண்டி ஏற்பட்டது' என்கிறார். மேலும் எனினும் இராணுவ வீரர்கள் என்ற சொல்லை பயன்படுத்தாதிருப்பதற்கு ஜனாதிபதி செயற்பட்டிருந்தார். இராணுவ வீரர்களை படையினர் என்றே விழித்திருந்தார். அனைத்து ராணுவ வீரர்களும் படையினர் என்ற போதிலும், அனைத்து படையினரும் இராணுவத்தினாராக முடியாது. படையினர் ராணுவ வீரராகுவதற்கு, அவர் போர் களத்தில் போரில் ஈடுபட்டி ருக்க வேண்டும்.

கௌரவத்திற்குரிய ஜனாதிபதி அவர்களே, இராணுவத்தினருக்கு முன்பாக நீங்கள் உண்மையாக பேசியிருக்க வேண்டும். மாறாக இனவாதம், அடிப்படைவாதம், பிரிவினைவாதத்துடன் செயற்படுகளின் புலம்பெயர் தமிழர்களின் முன்னிலையிலேயே இந்த பேச்சை பேசியிருக்க வேண்டும் என்று நாங்கள் ஜனாதிபதிக்கு நினைவுப்படுத்திக் கொள்கின்றோம்' என உதய கம்மன்பில தெரிவிக்கின்றார்.

இராணுவ வெற்றி நிகழ்விற்கான ஜனாதிபதியின் பிரவேசம் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன கருத்து வெளியிட்டிருந்தார். தனியார் ஊடகமொன்றுக்கு வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் வெளியிட்ட கருத்தை மேற்கோள்காட்டி, காவிந்த ஜயவர்தன கருத்து வெளியிட்டிருந்தார்.

விஜித்த ஹேரத் வெளியிட்ட கருத்தில் எங்களுக்கு பிரச்னையொன்று உள்ளது. இந்த நிகழ்விற்காக அழைப்பிதழ் வழங்கப்பட்டுள்ளது. தேசிய ராணுவ வெற்றி விழா கொண்டாட்டம், 2025 மே மாதம் 19ம் தேதி மாலை 16 மணிக்கு என குறிப்பிட்டு, அதில் கௌரவ பிரதி பாதுகாப்பு அமைச்சர் என அவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அழைப்பிதழில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் பெயர் இல்லை. மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவின் தலைமையில் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியென்றால், இந்த அழைப்பிதழை வெளியிட்டது யார் என்ற கேள்வி எழுகின்றது' என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன கேள்வி எழுப்புகின்றார்.

புலம்பெயர் தமிழர்களை சமாதானப்படுத்துவதற்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க செயற்பட்டு வருவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச தெரிவிக்கின்றார். அவர் இந்த நிகழ்விற்கு வர இருக்கவில்லை. எனினும், அவர் வரவில்லை என்பது முன்பே தெரிய வந்தமையினால் சமூகத்திலிருந்து வெளியிடப்பட்ட அழுத்தங்கள் காரணமாக விருப்பமின்றி அவர் வருகைத் தந்தார். அவர் அந்த இடத்தில் நிகழ்த்திய உரையில் என்ன சொல்கின்றார். அதில் உரையில் தடை செய்யப்பட்ட பல சொற்கள் உள்ளன. இராணுவம் என்ற சொல் தடை செய்யப்பட்டுள்ளது. உயிர் நீத்த படையினர், உயிர் நீத்த படை உறுப்பினர்கள் என்றே கூறுகின்றார். மிகவும் மோசமான செயற்பாடு. வராதிருந்திருந்தால் அதை விட சிறந்ததாக இருந்திருக்கும்' என விமர்சித்துள்ளார் விமல் வீரவங்ச. மேலும், 'புலம்பெயர் தமிழர்கள் கோபமடைவார்கள் என்ற அச்சமே அதற்கான காரணம். அந்த அச்சத்தை மனதில் வைத்துக் கொண்டே இந்த உரையை நிகழ்த்தியிருந்தார். அடுத்த தடை செய்யப்பட்ட சொல். பிரிவினைவாதம், பயங்கரவாதம் என்ற சொல் எங்கும் இல்லை. எமது இராணுவத்தினர் 30 வருடங்கள் யாருடன் போராடினார்கள். கிளர்ச்சியாளர்களுடனான போராடினார்கள். போருக்காக போராடவில்லை. சமாதானத்திற்காக போராடினார்கள். அப்படியென்றால் பயங்கரவாதிகளும் சமாதானத்திற்காகவே போராடியுள்ளனர் என்றார்.

நன்றி:- பிபிசி

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

17 மே 2025 - 23 மே 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ் வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி

வேலணை தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டி ருந்த திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 17 மே 2025 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களை நினைவு கூரும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம்

யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூர், லண்டன், மலேசியா ஆகிய இடங்களை வதிவிடமாகவும கனடா மிஸிசாகாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 18 மே 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தில்லைநாயகி கனகரெத்தினம்

நயினாதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தமிழ்நாட்டை வதிவிடமாகவும் கொண்டிருந்த சங்கீதபூஷணம் திருமதி தில்லைநாயகி கனகரெத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 19 மே 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தில்லைநாயகி கனகரெத்தினம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 21வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி குமாரதாசன் விஜயகௌரி

இணுவில் கிழக்கு இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திருமதி குமாரதாசன் விஜயகௌரி அவர்களின் 21வது ஆண்டு நினைவு நாள் 22 மே 2025 வியாழக்கிழமையாகும் அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி குமாரதாசன் விஜயகௌரி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 23வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி கங்காதரன்

மூளாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கங்காதரன் அவர்களது 23வது ஆண்டு நினைவு நாள் 11 மே 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரமேஸ்வரி கங்காதரன் நினைவு கூரந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 59வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கனகசபை பாலசிங்கம்

புங்குடுதீவு 3ம் வட்டாரம் குறிகாட்டுவானைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த பொறளை பாலன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு கனகசபை பாலசிங்கம் அவர்களின் 59வது ஆண்டு நினைவுநாள் 16 மே 2025 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கனகசபை பாலசிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



04 மே 2025 ஞாயிற்றுக்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தர்சன் சொர்ணலிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



11 மே 2025 ஞாயிற்றுக்கிழமை மூளாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கங்காதரன் அவர்களது 23வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



11 மே 2025 ஞாயிற்றுக்கிழமை சித்திரா பௌர்ணமி விரத உபயமாக புலோலி தெற்கு புலோலியைச் சேர்ந்த திருமதி பாக்கியம் சின்னையா அவர்களை நினைவு கூர்ந்து அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



13 மே 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வி சௌமியா கோணேஸ்வரன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சௌமியா தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



13 மே 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் இசை ஆசிரியை ஸ்ரீமதி சாருமதி மனோகாந்தன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் ஸ்ரீமதி சாருமதி மனோகாந்தன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



16 மே 2025 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரம் குறிகாட்டுவானைச் சேர்ந்த பொறளை பாலன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு கனகசபை பாலசிங்கம் அவர்களது 59வது ஆண்டு நினைவு தினமாகும். அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



16 மே 2025 வெள்ளிக்கிழமை கனடா Exevitive woodwork Ltd ஊழியர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



17 மே 2025 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கரன் சோபிகா தம்பதிகளின் செல்வப்புதல்வி சீதா லெட்சுமி கரனின் 2வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சீதா லெட்சுமி தனது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



17 மே 2025 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கரன் சோபிகா தம்பதிகளின் செல்வப்புதல்வி சீதா லெட்சுமி கரனின் 2வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சீதா லெட்சுமி தனது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



17 மே 2025 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கரன் சோபிகா தம்பதிகளின் செல்வப்புதல்வி சீதா லெட்சுமி கரனின் 2வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சீதா லெட்சுமி தனது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



17 மே 2025 சனிக்கிழமை வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களது 8வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



18 மே 2025 ஞாயிற்றுக்கிழமை யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூர் லண்டன் மலேசியா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



19 மே 2025 திங்கட்கிழமை சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த செல்வன் சிவசுப்பிரமணியம் சிவசங்கர் (குலம்) அவர்களது 27வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



19 மே 2025 திங்கட்கிழமை நயினாதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த சங்கீதபூஷணம் திருமதி தில்லைநாயகி கனகரெத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



22 மே 2025 இணுவில் கிழக்கு இணுவிலைச் சேர்ந்த திருமதி குமாரதாசன் விஜயகௌரி அவர்களது 21வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

# முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் 16ஆம் ஆண்டு நினைவேந்தலில்...



























யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவு தூபி முன்பாக அஞ்சலி நிகழ்வு இடம்பெற்ற தருணம்...!



நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்

உங்கள் அபிமான

**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா

கலைமாமணி டாக்டர்

## நித்யஸ்ரீ மகாதேவன்

வழங்கும்

# சங்கீத சங்கமம் 2025





ஈழத் தமிழினத்தின்
செஞ்சொற்செல்வர்

## ஆறு திருமுருகன்

அவர்கள் வழங்கும் சிறப்புரை

# வேர்களைத் தேடுங்கள்

இந்நிகழ்வு மூலம் சேகரிக்கப்படும் நிதி **கனடா தமிழ் சமூக மையத்திற்கும்** ஈழத்தின் அறப்பணியாளர் - செஞ்சொற்செல்வர் **ஆறு திருமுருகனது சமூகப் பணிக்கும்** ஈழநாடு வாசகர்கள் சார்பில் வழங்கப்படும்.

**அன்பளிப்பு** VIP $100 $50

என் இனிய உறவுகளே! ஓர் உயர்வான நோக்கத்திற்காகவும் - கனடிய மண்ணில் எமது அடையாளத்துக்காகவும் தாயக மண்ணில் எமது இருப்பை உறுதி செய்யவும் நடாத்தப்படும் இந்நிகழ்வு தொடர்பான இத்தகவலை உங்கள் முகநூல் மூலமாகவும் தனிப்பட்ட முறையிலும் உங்கள் நண்பர்களுக்கும் பகிர்ந்து உங்கள் ஆதரவை வழங்குங்கள்.

**SUNDAY**
**JUNE 01 2025**
**@5:30PM**

**METROPOLITAN CENTRE**
**3840 FINCH AVE EAST**
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு
**ஈழநாடு பரமேஸ்**
416-841-9600
eelanadu1993@gmail.com

**விழா 5.30 மணிக்கு ஆரம்பமாகும். 10.30 மணிக்கு நிறைவு பெறும். நேரடி ஒளி, ஒலி பரப்புக் கிடையாது.**

# உலகம் முழுவதும் உள்ள அகதிகளை வரவேற்க இந்தியா ஒன்றும் சத்திரம் அல்ல

## இலங்கைத் தமிழர் வழக்கில் உச்சநீதிமன்றம் கருத்து

உலகம் முழுவதும் உள்ள அகதிகளை வரவேற்க இந்தியா ஒன்றும் சத்திரம் அல்ல என, இலங்கைத் தமிழர் ஒருவரின் வழக்கில் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளதாக தினமணி நாளிதழில் செய்தி வெளியாகியுள்ளது.

அச்செய்தியில் 'இலங்கையில் செயல்பட்ட பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழர் ஒருவர், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் 2015ல் கைது செய்யப்பட்டார். 2018ல் விசாரணை நீதிமன்றம், அவரை குற்றவாளி என அறிவித்து 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

2022 ஆம் ஆண்டில் சென்னை உயர் நீதிமன் றம் அவரது தண்டனையை 7 ஆண்டுகளாகக் குறைத்தது 7 ஆண்டுகள் தண்டனை முடிவடைந்ததும் அவர் இந்தியாவில் இருக்கக் கூடாது, இலங்கைக்கு நாடு கடத்தப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது.

இதற்கு எதிராக அவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார். இலங்கையில் தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும் தனது மனைவி, குழந்தைகள் இந்தியாவில் குடியேறி விட்டதாகவும் கூறியுள்ள அவர், தன்னை நாடு கடத்தும் நடவடிக்கைகள் இன்னும் தொடங்கவில்லை என்பதால் தான் இந்தியாவிலேயே இருக்க அனுமதிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்போது நீதிபதிகள், 'உலகம் முழுவதிலுமிருந்து வரும் அகதிகளை இந்தியா வரவேற்க வேண்டுமா? ஏற்கெனவே நாங்கள் 140 கோடி மக்களுடன் இருந்து போராடி வாழ்ந்து வருகிறோம். இந்தியா, அனைத்து இடங்களிலிருந்தும் வரும் வெளிநாட்டினரை வரவேற்று மகிழ்விக்கக்கூடிய சத்திரம் அல்ல. இந்தியாவில் குடியேற உங்களுக்கு என்ன உரிமை உள்ளது? இலங்கையில் உயிருக்கு ஆபத்து இருந்தால் வேறு நாட்டுக்குச் செல்லுங்கள்' என்று மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டதாக கூறுகிறது அந்த செய்தி.

### நீதிபதிகளுன் கருத்துக்கு வை.கோ கடும் எதிர்ப்பு!

அகதிகளுக்கு எதிரான உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் கருத்துக்கள் மனித மாண்புகளுக்கு முற்றிலும் பொருத்தம் இல்லாதவை. இப்படிப்பட்ட கருத்துக்களை பயன்படுத்துவதை தவிர்க்க தலைமை நீதிபதி அறிவுறுத்த வேண்டும் என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: இலங்கை தமிழரான சுபாஷ்கரன் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் 2015ம் ஆண்டில் கைது செய்யப்பட்டு இராமநாதபுரம் நீதிமன்றம் அவருக்கு பத்தாண்டுகள் சிறை தண்டனை விதித்தது. சென்னை உயர் நீதிமன்றம் இவர் தண்டனையை ஏழாண்டு காலமாக 2022-ம் ஆண்டில் குறைத்தது

இவரது தண்டனை காலம் இந்த ஆண்டுடன் முடிவதை முன்னிட்டு, தண்டனைக் காலம் முடிந்தவுடன் இந்தியாவிலேயே தங்க அனுமதி கோரி உயர் நீதிமன்றத்தில், அவர் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில், அவர் முறையிட்ட போது, அந்த வழக்கை விசாரித்த நீதிபதிகளான திபங்கர் தத்தா மற்றும் வினோத் சந்திரன் அமர்வு "உலகம் முழுவதிலும் உள்ள அகதிகளை வரவேற்க இந்தியா தர்ம சத்திரம் அல்ல, இந்தியாவில் தொடர்ந்து தங்கும் உரிமை உங்களுக்கு இல்லை, இலங்கையில் உயிருக்கு ஆபத்து என்றால் வேறு நாட்டுக்குச் சென்று புகலிடம் கோருங்கள் என்று தெரிவித்துள்ள கருத்து கவலைக்கு உரியதாகும்.

தமிழ்நாட்டில் இலட்சக்கணக்கான இலங்கை தமிழர்கள் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களில் சிலரை இந்திய அரசு, இந்தியாவிலிருந்து வெளியேற வேண்டும் என உத்தரவிட்ட போது, இது தொடர்பான வழக்கில் சென்னை உயர்



நீதிமன்றம், இலங்கை தமிழ் அகதிகளை அவர்களின் ஒப்புதல் இல்லாமல் திருப்பி அனுப்பும் அதிகாரம் அரசுக்கு உண்டு என்பது ஏற்கத்தக்கது அல்ல. திரும்பிச் செல்ல விரும்பாத அகதிகளை கட்டாயப்படுத்தி வெளியேற்றக் கூடாது என ஆணை பிறப்பித்தது. இதன் விளைவாக இலங்கை தமிழர்கள் இங்கு வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த நிலையில், உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் கருத்துக்கள் அரசமைப்புச் சட்டம் வலியுறுத்துகிற மனித மாண்புகளுக்கு முற்றிலும் பொருத்தம் இல்லாத வார்த்தைகள். நீதிபதிகள் இப்படிப்பட்ட கருத்துக்களை பயன்படுத்துவதை தவிர்க்க அறிவுறுத்துமாறு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியை கேட்டுக் கொள்கிறேன் என்று வைகோ கூறியுள்ளார்.

# போலி விமானங்கள் மூலம் பாகிஸ்தானை ஏமாற்றிய இந்தியா!

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் போது ஆளில்லாத போலி போர் விமானங்கள் மூலம் பாகிஸ்தான் ராணுவத்தை இந்திய ராணுவம் எளிதாக ஏமாற்றி உள்ளது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடியாக, ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் கடந்த 7-ம் திகதி பாகிஸ்தானின் 9 தீவிரவாத முகாம்களை இந்திய விமானப்படை அழித்தது. இதன்பிறகு கடந்த 7,8, 9,10 ஆகிய திகதிகளில் இந்தியா, பாகிஸ்தான் இடையே மிகப்பெரிய போர் நடைபெற்றது.

கடந்த 9-ம் திகதி நள்ளிரவில் பாகிஸ்தானின் 11 விமானப் படை தளங்களை, இந்திய போர் விமானங்கள் பிரம்மோஸ், ஸ்கால்ப் உள்ளிட்ட ஏவுகணைகள் மூலம் அழித்தன. இந்த தாக்குதல் குறித்து இந்திய பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் கூறியதாவது:

பாகிஸ்தானின் ட்ரோன், போர் விமானங்களின் தாக்குதலை முறியடிக்க அந்த நாட்டின் விமான படை தளங்களை அழிக்க முடிவு செய்யப்பட்டது. இதற்காக கடந்த 9-ம் திகதி நள்ளிரவில் லட்சியா என்ற ஆளில்லா ட்ரோன்கள் பாகிஸ்தான் விமான படை தளங்கள் மீது பறக்க விடப்பட்டன.

இந்த ட்ரோன்கள் சுகோய், மிக் 29 ரக போர் விமானங்கள் போன்று தத்ரூபமாக தயார் செய்யப்பட்டு இருந்தன. இவை உண்மையான போர் விமானங்கள் என்று நம்பிய பாகிஸ்தான் விமானப் படை அனைத்து வான் பாதுகாப்பு கவசங்களையும் ஒரே நேரத்தில் இயக்கியது.

லட்சியா ட்ரோன்களை குறி வைத்து பாகிஸ்தான் ராணுவமும் விமானப் படையும் இணைந்து தரை, வான் வழியாக பல்வேறு ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தின. ஆனால் மணிக்கு 850 கி.மீ. வேகத்தில் பறக்கும் திறன்கொண்ட லட்சியா ட்ரோன்களை பாகிஸ்தான் விமானப் படையால் சுட்டு வீழ்த்த முடியவில்லை. இந்தியாவின் போலி போர் விமானங்களுடன் பாகிஸ்தான் போர் விமானங்கள் மிக தீவிரமாக போரிட்டு கொண்டிருந்தன.



அந்த நாட்டு இராணுவம் மற்றும் விமானப் படையின் முழு கவனமும் லட்சியா ட்ரோன்கள் மீது இருந்தன. இந்த நேரத்தில் இந்திய எல்லைப் பகுதிகளில் இருந்து சுகோய், ர.ஃபேல் போர் விமானங்கள் பாகிஸ்தான் விமான படைத் தளங்களை குறிவைத்து சக்திவாய்ந்த ஏவுகணைகளை வீசின.

சுகோய் போர் விமானங்களில் இருந்து அடுத்தடுத்து சீறிப் பாய்ந்த 15 பிரம்மோஸ் ஏவுகணைகள் பாகிஸ்தான் விமான படை தளங்களை துல்லியமாக தாக்கி அழித்தன. இதேபோல ர.ஃபேல் போர் விமானங்களில் இருந்து சீறிப் பாய்ந்த ஸ்கால்ப் ஏவுகணைகள் பாகிஸ்தான் விமான படை தளங்களை துவம்சம் செய்தன.

இதில் பாகிஸ்தானின் 11 விமான படை தளங்கள் மிகக் கடுமையாக சேதமடைந்தன. ஏராளமான போர் விமானங்கள் அழிந்தன. ஓடுதளங்களில் ராட்சத பள்ளங்கள் ஏற்பட்டதால் எந்தவொரு போர் விமானத்தையும் இயக்க முடியாத சூழல் எழுந்தது.

மேலும் லட்சியா ட்ரோன்கள் மூலம் பாகிஸ்தானின் வான் பாதுகாப்பு கவசங்கள் எந்தெந்த இடங்களில் உள்ளன என்பது மிகத் துல்லியமாக கண்டறியப்பட்டது.

இதன் மூலம் அந்த நாட்டின் எச்கியூ -9 என்ற வான் பாதுகாப்பு கவசங்களும் முழுமையாக அழிக்கப்பட்டன. இவ்வாறு இந்திய பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

# 16வது மே18ம் உள்ளூராட்சி சபைகளும்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



ஆரியகுளம் சந்தியில் அமைக்கப் பட்டிருந்த வெசாக் பந்தல்களைப் பார்ப்பதற்கு ஒரு பகுதி தமிழர்கள் போனது உண்மை. புதுக்குடியிருப் பிலும் கிளிநொச்சியிலும் அமைக்கப் பட்டிருந்த வெசாக் அலங்காரங்களைப் பார்ப்பதற்கு ஒரு பகுதியினர் போனது உண்மை. புதுக்குடியிருப்பில் ஆயிரக் கணக்கில் போய் படைத்தரப்பு வழங் கிய குடிபானங்களையும் அன்னதானத் தையும் வாங்கியதும் உண்மை.


அதே சமயம் கடந்த வாரம் தாயகம் முழுவதிலும் ஆங்காங்கே பரவலாக முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி கொடுக்கப்படுவதும் உண்மை.மக்கள் பரவலாக அதை வாங்கி அருந்துவ தும் உண்மை. இன்று முள்ளிவாய்க் காலில் பெருந் திரளாக மக்கள் திரள் வார்கள் என்பதும் உண்மை.

ஒரு தேசம் என்பது அப்படித் தான் இருக்கும். தேசங்கள் எப்பொழுதும் தட்டையாக ஒற்றைப் பரிமாணத்தில் இருப்பதில்லை. வெசாக் பந்தல்களைப் பார்க்க போனவர்கள் எல்லாருமே படையினரின் நண்பர்களும் அல்ல. பொழுது போக்காகப் போனவர்களும் உண்டு. விடுப்புப் பார்க்கப் போனவர் களும் உண்டு. ஆனால் அவர்களின் பலர் பின்னர் கஞ்சி வாங்கிக் குடித் திருப்பார்கள். முள்ளிவாய்க்காலுக்கும் போயிருப்பார்கள். ஒரு தேசம் என்றால் அப்படித்தான். எல்லாத் தரப்புக்களும் இருப்பார்கள். யார் அதிகமாக இருக் கிறார்கள் என்பது தான் இங்கே முக்கி யம். நாடு மே 18ஐ நினைவுகூரும் என்பது தான் இங்கு முக்கியம்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் அதற்கான தயாரிப்புகளை கடந்த வாரம் முழுவதும் செய்து வருகிறார் கள். கட்சிகளும் செயற்பாட்டாளர் களும் செய்கிறார்கள். நீதி கிடைக்காத

அதாவது நினைவு கூரும் மாதம் ஒன்றில் தமிழ் மக்கள் தமிழ் கட்சி களுக்கு வழங்கிய ஆணை என்பது பெருமளவுக்கு தொங்கு சபைகள்

வாக்காளர்கள் மத்தியில் சோர்வு அல்லது தளர்வு ஏற்பட்டதும் ஒரு காரணம் யாழ்ப்பாணம் ஈவினைப் பகுதியில் நடந்த ஒரு விடயத்தைச்



தான். அந்த மக்கள் ஆணைக்குள் மறைமுகமாக ஒரு செய்தி உண்டு. ஒன்றுபடுங்கள் என்பது தான் அது. ஒன்றுபடா. விட்டால் பெரும்பாலான சபைகளை நிர்வகிக்க முடியாது.

மேலும் உள்ளூராட்சி சபைகளை நிர்வகிப்பதற்கு மட்டுமல்ல. அதற்குமப் பால் அடுத்து வர இருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை எதிர்கொள்வதற் கும் அதுமிக அவசியமானது. ஏனென் றால் உள்ளூராட்சி சபை தேர்தல்

சுட்டிக்காட்ட வேண்டும். அங்கு வாக்களிப்பில் கலந்து கொள்ள ஆர்வ மின்றிக் காணப்பட்ட முதியவர்களை வாக்களிப்பு நிலையங்களை நோக்கிச் செல்லுமாறு தூண்டுவதற்கு சில கட்சிசாரா பெண் செயற்பாட்டாளர்கள் முயற்சித்திருக்கிறார்கள். தொடர்ச்சி யாக அவர்கள் முயற்சித்த பொழுது, ஒரு கட்டத்தில் முதியவர்கள் சொன் னார்களாம், எங்களுக்கு வாக்களிப்பில் ஆர்வம் இல்லை. இவர்கள் ஒற்றுமைப

அல்லது நீதியை நோக்கி மெதுமெது வாக ஊர்ந்து போகின்ற 16ஆவது ஆண்டு இது.

அமெரிக்கக் கண்டத்தில் இன அழிப்பு செய்தவர்களுக்கு எதிராக தடைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. குறிப்பாக கடந்த வாரம் கனடாவில் ஒரு நினைவுச் சின்னம் நிறுவப்பட்டிருக் கிறது. தாயகத்துக்கு வெளியே அதிக தொகை ஈழத் தமிழர்கள் வாழ்வது கனடாவில்தான்.சில வாரங்களுக்கு முன்பு பிரித்தானியாவும் இனஅழிப்பு செய்தவர்களுக்கு எதிராகத் தடை களை விதித்திருக்கிறது.

இப்படிப்பட்டதோர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சூழலில், தாயகத்தில் தமிழ் அரசியல்வாதிகள் ஒருபுறம் கஞ்சி காய்ச்சுகிறார்கள்இன்னொருபுறம் புதிய உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குவதற்காக பேச்சுவார்த்தை களில் ஈடுபட்டு வருகிறார்கள். மே 18 முடிந்த இரண்டு வாரங்களில் புதிய உள்ளூராட்சி மன்றங்களை ஸ்தாபிக்க வேண்டும்.

தமிழ்ப் பகுதிகளில் உள்ள மொத்தம் 56 சபைகளில் ஆறு சபைகளில் மட்டும் தான் நிச்சயமான அறுதிப் பெரும்பான்மை உண்டு. எதிர்க்கட்சி கள் இணைந்து தோற்கடிக்கப்பட முடியாத பெரும்பான்மை.எனைய பெரும்பாலான எல்லாச் சபைகளிலுமே தொங்கு நிலைதான். மொத்தம் 36 சபைகளில் வீடு முன்னிலை வகிக்கின் றது. மூன்று சபைகளில் சைக்கிள் முன்னிலையில் நிற்கின்றது.ஒரு சபையில் சங்கு.ஒரு சபையில் வீணை. ஒரு சபையில் காரைநகரில் யாருக்கும் பெரும்பான்மை இல்லை.

முடிவுகளின் படி,தமிழ்ப் பகுதிகளில் என்பிபி பெரும்பாலும் இரண்டாம் இடத்தில் நிற்கின்றது. அது பெரும் பாலும் உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றும் வளர்ச்சியைப் பெற வில்லைத் தான். ஆனால் 6 மாதங்களில் ஒரு தென்னிலங்கைக் கட்சி பெற்ற வளர்ச்சி என்பது தமிழ்த்தேசிய கட்சி களுக்கு எச்சரிக்கை மணி போன்றது.

படட்டும் நாங்கள் உற்சாகமாகப் போய் வாக்களித்து விட்டு வருவோம். நீங்கள் எவ்வளவு தான் தூண்டினா லும் நாங்கள் வாக்களிக்க வரவே மாட்டோம் என்று திட்டவட்டமாக மறுத்து விட்டார்களாம்.

இப்படி எத்தனை கிராமங்களில் வாக் காளர்கள் சோர்ந்து போய், ஆர்வமின்றி



மாகாண சபைத் தேர்தல்களை நோக்கி ஏதோ ஓர் ஒருங்கிணைப்புக்குப் போகத் தவறினால் தேசிய மக்கள் சக்தி உற்சாகமாக உழைக்கும்.

தேசிய மக்கள் சக்தி மட்டுமல்லை தமிழ் வாக்காளர்களும் நம்பிக்கையூட் டும் எதையாவது காட்டினால் தான் ஆர்வத்தோடு உற்சாகமாக வாக்களிக்க வருவார்கள். தொடர்ச்சியாக மூன்று தேர்தல்கள் வந்து விட்டன. உள்ளூ ராட்சி சபைத் தேர்தல்களில் வாக்க ளிப்பு வீதம் குறைவதற்குக் காரணம் தொடர்ச்சியாக மூன்று தேர்தல்கள் நடத்தப்பட்டமை மட்டுமல்ல. தமிழ்

வாக்களிக்க வராமல் இருந்திருப்பார் கள்? தமிழ்த் தேசிய வாக்களிப்புப் பாரம்பரியத்தைப் பொறுத்தவரை வாக்களிப்பு அலை ஒன்று தோன்றும் போதுதான் அதிக ஆசனங்கள் கிடை க்கும். வாக்களிப்பு அலை என்பது பெரும்பாலும் ஒரு தமிழ்த் தேசிய அலைதான்.அதைத் தூண்டுவதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் படைப்புத் திறனோடு சிந்திக்க வேண்டும். ஐக்கியப்பட்டுச் சிந்திக்க வேண்டும்.

இப்படிப்பட்டதோர் பின்னணியில் மே18 இன் பின் இரண்டே வாரங்களில் அமைக்கப்படவிருக்கும் உள்ளூ

ராட்சி சபைகளில் எவ்வாறு தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் நிர்வாகத்தை அமைப்பது என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆழமாக உரையாடி வருகின்றன.

வவுனியாவில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரசுக் கட்சி யோடு உடன்படிக்கைக்கு வந்திருப்ப

தாகத் தெரிகிறது. அது போல எல்லாச் சபைகளிலும் தமிழ்த் தேசியக் கட்சிகள் அல்லாத கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றுவதைத் தடுப்பது என்ற அடிப்படையில் தமிழ்த் தேசிய நிலைப் பாட்டைக் கொண்ட கட்சிகள் ஐக்கி யப்படலாம். அல்லது பகை தவிர்ப்பு உடன்படிக்கைக்குப் போகலாம்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைமையிலான தமிழ்த்தேசியப் பேரவை ஒரு கொள்கை விடயத்தைத் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வரு கிறது. தீர்வு விடயத்தில் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணி எக்கிய ராஜ்ய வைக் கைவிட வேண்டும் என்று அந்தக் கூட்டு கேட்கின்றது. இறுதித் தீர்வு என்று வரும் பொழுது ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்தத் தீர்வையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. அது தொடர்பான சமரசங்களுக்கும் இடமிருக்கக் கூடாது. ஆனால் ஒரு தீர்வை நோக்கிய யாப்புருவாக்க முயற்சிகள் இப்போதைக்குத் தொடங் குமா?

எப்பொழுது தொடங்கும் என்று தெரி யாத ஒரு யாப்புருவாக்க முயற்சியை நோக்கி ஐக்கிய முயற்சிகளை ஒத்தி வைப்பதா? அல்லது உடனடிக்கு உருவாக்கப்பட வேண்டிய உள்ளூ ராட்சி சபைகளை நோக்கிச் சிந்திப் பதா? அது போல மாகாண சபைத் தேர்தல்களை நோக்கிச் சிந்திப்பதா? எது சரி?

இரண்டுமே சரி. தீர்வு முயற்சிகளை நோக்கி நீண்ட கால நோக்கில் கொள்கைத் தெளிவோடு இருக்க வேண்டும். அதே சமயம் தமிழ்த் தேசியக் கட்சிகள் அல்லாத கட்சிகள் உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்று வதைத் தடுப்பது என்பதும் தமிழ்த் தேசியக் கொள்கையின் ஒரு பகுதித ான். பொது எதிரிக்கு எதிராக ஒன்றி ணைவது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின்படி வரக் கூடிய மாகாண சபை தேர்தலில் என்பிபி புதிய சவால்களை ஏற்படுத்தக் கூடும். அதை நோக்கித் தமிழ்த் தேசியக் கட்சி கள் ஆழமாக உரையாட வேண்டும். பொது எதிரிக்கு எதிரான தேசிய ஐக்கியத்தைப் பற்றி ஆழமாக உரை யாட வேண்டும். இல்லையென்றால் அதாவது தமிழ்த் தேசியக் கட்சிகள் பிரிந்து நின்றால், உள்ளூராட்சி சபை தேர்தல்களில் விழுந்தது போல வாக்கு கள் விழுமாக இருந்தால், அல்லது வாக்குகள் விழாமல் போனால், அது என்.பி.பிக்கு அனுகூலமாக முடியலாம்.

ன்பிபிக்கு தமிழ் மக்களின் ஆணை கிடைக்குமாக இருந்தால் தீர்வு விடயத்தில் அவர்கள் தமிழ்த் தேசிய கட்சிகளைப் பொருட்படுத்தப் போவ தில்லை. எனவே, என்பிபிக்கு மக்கள் ஆணை கிடைக்கக்கூடாது என்ப தும் ஒற்றையாட்சிக்குட்பட்ட தீர்வை தடுப்பதற்கு அவசியமான உத்திகளில் ஒன்றுதான்.இந்த அடிப்படையில் தமிழ்த் தேசியக கட்சிகள் சிந்திக்க வேண்டும்.

தேர்தல்களை நோக்கி அதாவது உள்ளூராட்சி சபைகளை நிர்வகிப்பது என்ற அடிப்படையில் ஐக்கியத்தைப் பற்றி பேச முடியாது என்ற நிலைப் பாடு சரி. அதேசமயம் தேர்தல்களின் மூலம் தேசிய மக்கள் சக்தி மக்கள் ஆணை பெறுவதைத் தடுக்கவும் வேண்டும (22ம் பக்கம் பார்க்க)

# வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல் முடிவுகள் குறித்த ஒரு நுண்ணாய்வு!

புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல் (60வீத வட்டார ரீதியான நேரடித் தெரிவும் 40வீத விகிதாசாரத் தெரிவும்) நடைமுறையின் கீழ் முதன்முதல் 2018 மார்ச் இல் தேர்தல் நடைபெற்று அவற்றின் ஆட்சிக் காலம் 2022 மார்ச் இல் முடிவுற்ற பின்னர் 2023 மார்ச் வரை ஓராண்டு காலம் நீடிக்கப்பட்டுப் பின் 2023 இல் வேட்பு மனுக்களும் கோரப்பட்டு ஏற்கப்பட்டு தேர்தலுக்கான திகதி



அறிவிக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட தேர்தல் திகதிகள் இரு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டுப் பின் அதுவும் இழுத்தடிக்கப்பட்டு இறுதியில் தேர்தல் நடைபெறாமலேயேபோய் பின்னர் 2024 நவம்பரில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் முன்பு 2023 இல் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் ரத்துச் செய்யப்பட்டு கட்டுப்பணங்களும் மீளக் கையளிக்கப்பட்டு புதிய வேட்பு மனுக்கள் கோரப்பட்டுப் புதிய தேர்தல் 06.05.2025 இல் நடைபெற்று முடிந்துள்ளது.

கடந்த வருடம் நடந்தேறிய ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் (தென்னிலங்கை போன்றே) வீசிய அனுரகுமார திசாநாயக்க அலை கணிசமான தமிழர்களின் வாக்குகளைத் தேசிய மக்கள் சக்திக் கட்சிக்குப் பெற்றுக் கொடுத்திருந்த நிலையில் இவ் உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலின் முடிவுகள் வடக்கு கிழக்கில் எவ்வாறு அமையும் என்பதையிட்டு இறுதிவரை எதிர்வு கூறமுடியாமல் தான் இருந்தது.

ஆனால் இப்போது தேர்தல் நடைபெற்று முடிவுகள் வெளிச்சத்திற்கு வந்துள்ள நிலையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர்களுடைய வாக்குகள் எந்த அடிப்படையில் அளிக்கப்பட்டன என்பது குறித்து ஒரு நுண்ணாய்வை வெளிப்படுத்துவதே இப்பத்தியின் இலக்காகும்.

இத்தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணத் தமிழர்கள் எதிர்பார்த்ததை விடவும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குப் பெரும்பான்மையாக வாக்களித்துள்ளனர். இதன் அர்த்தம் தமிழ்த் தேசியக் கட்சிகள் என்று நாமகரணம் சூட்டிக் கொண்டுள்ள இக்கட்சிகளின் மீது தமிழர்கள் இப்போதும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என்பதோ அல்லது உள்ளூராட்சி அதிகார சபை அதிகாரத்தில் அமர்ந்து இக்கட்சிகள் ஊழல் மோசடிகள் அற்ற அதிகார துஷ்பிரயோகங்கள் அற்ற நிர்வாகத்தின் மூலம் மக்களுக்கு உண்மையும் நேர்மையும் வெளிப்படைத் தன்மையுமுடையதான சேவைகளை வழங்கி உள்ளூர் மட்டத்தில் தமிழ் மக்களைச் சமூக பொருளாதார ரீதியாக இக்கட்சிகள் கைதூக்கிவிடும் வகையில் வினைத்திறன் படைத்தவை என்ற எதிர்பார்ப்பிலுமோ அல்ல.

வடக்கு கிழக்கில் உள்ளூர்மட்ட அதிகாரங்களை (இது மாகாண சபைக்கும் பொருந்தும்) எக்காரணம் கொண்டும் அது எத்தகைய முற்போக்கு முகத்தைக் கொண்டிருந்தாலும் கூட ஒரு தென்னிலங்கைச் சிங்களப் பெரும்பான்மைக் கட்சியிடம் (தேசிய மக்கள் சக்தியிடம்) ஒப்படைப்பதற்கு வடக்கு கிழக்குத் தமிழர்கள் முழுமையாக விரும்பவில்லை அல்லது அதற்குத் தயாரில்லையென்பதை உணர்வுபூர்வமாக எடுத்துச் சொல்வதற்கு வேறு மாற்று வழியில்லாமல் தான் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு அவை கடந்த காலங்களில் எத்தனை அரசியல் தப்பிராட்டியங்களைப் பண்ணியிருந்தாலும் கூட அவற்றைப் பொருட்படுத்தாமல் பெரும்பான்மையாக வாக்களித்திருக்கிறார்கள். இந்த நிலைப்பாடு இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்ட அரசியற் பயணத்தில் தவிர்க்க முடியாததும் கூட. இதைத் தவறென்றும் கூறமுடியாது.

ஆனால், இப் ‘போலித்’ தமிழ்த் தேசியக் கட்சிகளோ இத்தேர்தல் முடிவுகளை வைத்துக் கொண்டு ஏதோ தமிழீழம் கிடைத்த மாதிரி தம்பட்டம் அடிக்கின்றன. மக்களிடம் இருக்கும் அரசியல் தெளிவும் உணர்வும் கட்சிகளிடமும் தலைவர்களிடமும் இல்லையென்பதையே இது காட்டுகிறது.

இப் ‘போலித்’ தமிழ்த் தேசியக் கட்சிகள் மட்டுமல்ல போலிக் (கிழக்கின் ஒற்றும கிழக்கின் அபிவிருத்தி கிழக்கின் தனித்துவம்) பேசும் கட்சிகள் என்று எல்லாத் தமிழ் அரசியல் கட்சிகளுமே அரசியல் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமலும் தம்மைச் சுய விமர்சனம் செய்வதைத் தவிர்த்துக் கொண்டும் இத்தேர்தல் முடிவுகள் குறித்த தமது கருத்துக்களை ‘யானை பார்த்த குருடர்கள்’ போலத் தமது வாசிக்கேற்றவாறும் மக்களை வஞ்சிக்கும் தம்முடைய சுயநல அரசியல் நோக்கங்களுக்கு ஏற்றவாறும் பொருள்கோடல்களை வெளிப்படுத்தி வருகின்றன.

இதனையிட்டுத் தமிழ் மக்கள் அரசியல் விழிப்புணர்வுடனும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும். இந்த இரு தரப்பினரும் நம்பிக்கைக்குரியவர்களல்ல.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் இக் கட்சிகளுக்கு வாக்களித்தமை தமது அரசியல் உணர்வினை வெளிப்படுத்த தமிழ் மக்களிடையே வேறு மாற்று வழி இல்லாததாலேயே என்பதற்குக் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச சபையை உதாரணமாகக்கொள்ள முடியும்.

திருக்கோவில் பிரதேச சபை 100வீதம் தமிழ் மக்களைக் கொண்டதாகும். இங்கு போட்டியிட்ட சுயேச்சைக் குழுவொன்று தமிழரசுக் கட்சியைத் தோற்கடித்து வெற்றியீட்டியுள்ளது. திருக்கோவில் பிரதேச சபை எல்லைகளுக்கு உட்பட்ட பிரதேசத்தில் ஒரு மாற்று வழியை (மாற்று அரசியல் அணியை) அடையாளம் கண்டதால் தான் மக்கள் இச் சுயேச்சைக் குழுவை வெற்றியீட்டச் செய்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் திருக்கோவில் பிரதேச சபை போன்று வடமாகாணத்தில் சுயேச்சைக் குழு எதுவும் அடையாளம் காணப்படவில்லை.

இத்தகைய ஒரு மாற்று அரசியல் அணியொன்று எதிர்காலத்தில் கிழக்கு மாகாண மட்டத்திலும் வடக்கு மாகாண மட்டத்திலும் தனித்தனியாக அடையாளம் காணப்பட வேண்டும் என்பதன் அவசியத்தை இது எடுத்துக் காட்டுகிறது. ஏனெனில் தற்போது தமிழர்களுடைய அரசியல் பொது வெளியில் மக்களை ஏமாற்றும் தமிழ்க் கட்சிகளே மலிந்துள்ளன. இவை யாவும் எதிர்காலத்தில் மக்களால் முற்றாக நிராகரிக்கப்படும் வகையில் புதிய மாற்று அரசியல் அணியொன்று மேற்கிளம்புவது அவசியம்.

அதேவேளை கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்களிடையே வீசிய அனுரகுமார திசாநாயக்க அலை இன்னும் ஓயவில்லை என்பதையும் உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலின் முடிவுகள் வெளிக்காட்டியுள்ளன. ஆனாலும் அலை சற்று ஐதாகத் தான் அடித்துள்ளது. ஒப்பீட்டளவில் கடந்த காலங்களில் நடந்த தேர்தல்களில் ஏனைய தென்னிலங்கைக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி-ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி-மக்கள் முன்னணி (PA)-ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு-பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளுக்கு வடக்கு கிழக்கு தமிழர்கள் வாக்களித்ததை விட எண்ணிக்கை அடிப்படையில் இந்த உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலில் இன்னொரு தென்னிலங்கைக் கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு கணிசமான அளவு கூடுதலாக வழங்கியுள்ளனர். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீது தமிழ் மக்கள் இன்னும் எதிர்பார்ப்புடன் இருக்கிறார்களென்பதையே இது காட்டுகிறது.

இதற்குக் காரணம் தேசிய மக்கள் சக்தி இன பிரச்சனைக்கான திருப்தியான தீர்வை உத்தேச புதிய அரசியலமைப்பு மூலம் வழங்குமென்ற நம்பிக்கையினாலோ அல்லது குறைந்தபட்சம் 13 ஆவது திருத்தத்தைத் தானும் முழுமையாகவும் முறையாகவும் அமுல் செய்யும் என்ற எதிர்பார்ப்பினாலோ அல்ல. அதற்கான பிரதான காரணங்களை பின்வருமாறு பட்டியலிடலாம்.


கட்டுரையாளர்:-
மட்டக்களப்பில் இருந்து
தம்பியப்பா
கோபாலகிருஷ்ணன்




தற்போது தமிழர்களுடைய அரசியல் பொதுவெளியில் செயற்படுகின்ற தமிழ் அரசியல் கட்சிகளின் மீது ஏற்பட்டுள்ள வெறுப்பும் விரக்தியும்.

தனிப்பட்ட முறையில் ஜனாதிபதி அனுரகுமாரதிசாநாயகாவின் மீதுள்ள அபிமானமும் வசீகரமும்.

நாடளாவிய ரீதியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் ஊழல் மோசடிகளற்ற-அதிகார துஷ்பிரயோகங்களற்ற-வீண் விரயமற்ற-இனவாத முகமற்ற அரச நிர்வாகத்தினால் விளையும் என எதிர்பார்க்கக் கூடிய நாடளாவிய நன்மைகள் நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கும் ஆங்கே பொசிந்ததுபோல் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கும் சுவறும் என்ற நம்பிக்கை-எதிர்பார்ப்பு.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் செயல்படுகின்ற இடதுசாரித்துவ ஈர்ப்புக் கொண்ட சக்திகள் மேற்கொண்ட தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவான பிரச்சாரம்.

மேற்கூறப்பட்ட பிரதான காரணங்களால் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த வாக்காளர்கள் அமைதியாக அக்கடமையை நிறைவேற்றினார்களே தவிர தமிழ்த் தேசியக் கட்சிகளையோ அல்லது கிழக்கின் தனித்துவக் கட்சிகளையோ எதிர்த்துத் தீவிரமான பிரச்சாரங்கள் எதனையும் மேற்கொள்ளவில்லை.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க விரும்பாமல் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் வாக்களித்த தமிழர்கள்கூட அதாவது தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்காதவர்கள் கூட தென்னிலங்கையில் தேசிய மக்கள் சக்தி வெற்றியீட்ட வேண்டுமென்றே விரும்பியிருந்தனர்.

ஆனால், இக் காரணங்களின்-நிலைமைகளின் ஆயுட்காலம் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் அல்லது நிரந்தரமாய் இருக்கும் என்பதும் கேள்விக் குறியுடனானதொரு விடயம் தான்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் வடக்கு கிழக்கு மாகாணத் தமிழர்களுடைய அரசியல் பொதுவெளியில் (போலித்) தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் (போலிக்) கிழக்கின் தனித்துவக் கட்சிகளுக்கும் தமிழ் வாக்காளர்கள் ‘சிவப்பு’ விளக்குச் சமிக்ஞையையும் தேசிய மக்கள் சக்திக்குப் ‘பச்சை’ விளக்குச் சமிக்ஞையையும் காட்டினார்கள்.

ஆனால், நடந்து முடிந்துள்ள உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணத் தமிழர்கள் முன் எச்சரிக்கையாக ‘மஞ்சள்’ விளக்குச் சமிக்ஞைகளையே இம் மூன்று தரப்பினருக்கும் காட்டியுள்ளார்கள்.

இந்த ‘மஞ்சள்’ விளக்குச் சமிக்ஞைகள் எதிர்காலத்தில் ‘பச்சை’யாக மாற வேண்டுமானால்(22ம் பக்கம் பார்க்க)

# 16வது மே18இல் நீதிக்கான போராட்டம்!



நீதி கிடைக்காத 16ஆவது ஆண்டு கடந்த 16 ஆண்டுகளாக தமிழ் மக்கள் தங்களுடைய அரசியலை நீதிக்கான போராட்டம் என்று வர்ணிக்கின்றார்கள். ஆனால் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டமானது தொடர்ச்சியானதாக செறிவானதாக பெருந் திரள் மயப்பட்டதாக இல்லை. அவை அவ்வப்போது தொடர்ச்சியாக நிகழும் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக, அடக்கு முறைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் போராட்டங்களாகத் தான் காணப்படுகின்றன.

கடந்த 16 ஆண்டுகளில் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருப்பது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மட்டும் தான். அவர்களுடைய போராட்டம் தான் ஒப்பீட்டளவில் தொடர்ச்சியானது. கடந்த 16 ஆண்டுகளாக தமிழ் மக்கள் உலகின் கவனத்தை ஈர்க்கத்தக்க விதத்தில் தென்னிலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் அல்லது தென்னிலங்கைக்கு நோகக் கூடிய விதத்தில் எவ்வளவு தூரம் போராடியிருக்கிறார்கள்?

சில எழுக தமிழ்கள். ஒரு பி.ரு.பி அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான போராட்டங்கள். தமிழ்ப் பொது வேட்பாளர் போன்றவை... தவிர நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டம் தொடர்ச்சியானதாகவோ அல்லது தென்னிலங்கையை அசைக்கக் கூடியதாகவோ இல்லை. ஏன்?

ஏனென்றால் கடந்த 16 ஆண்டு கால தமிழ் அரசியலானது பெருமளவுக்கு கட்சிகள் மைய அரசியலாகத் தான் இருக்கின்றது. தேர்தல் மைய அரசியல் தான். பெருமளவுக்குத் தேர்தலை நோக்கியே கட்சிகள் உழைக்கின்றன .அதேசமயம் பொதுமக்கள் போராடும் போது அல்லது பாதிக்கப்பட்டவர்கள் போராடும் போது அல்லது மக்கள் அமைப்புகள் போராட்டத்தை முன்னெடுக்கும் பொழுது கட்சிகள் அவற்றில் இணைக்கின்றன. நீதிக்கான போராட்டத்தை முன்னெடுக்கத் தேவையான ஒரு அரசியல் பேரியக்கம் தமிழ் மக்கள் மத்தியில் இல்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தன்னை ஓர் அரசியல் இயக்கம் என்று கூறிக் கொண்டது. தமிழ்த் தேசியப் பேரவையையும் அது அவ்வாறு தான் தன்னை அழைக்கின்றது. ஆனால் நடைமுறையில் அவை தேர்தல் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது தான். பொது வேட்பாளருக்காக உருவாக்கப்பட்ட மக்கள் அமைப்பும் ஒரு பேரியக்கமாக அடுத்த கட்ட வளர்ச்சியைப் பெறவில்லை. இவ்வாறு தமிழ் மக்கள் மத்தியில் நீதிக்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு வேண்டிய அடிப்படைக் கட்டமைப்பு இல்லாத ஒரு வெற்றிடத்தில் கட்சி மைய அரசியலுக்கு ஊடாக நீதிக்கான போராட்டத்தை முழு அளவுக்கு தாக்கமானதாகவும் செறிவானதாகவும் தொடர்ச்சியானதாகவும் முன்னெடுக்க முடியாத ஒரு நிலைமை தான் காணப்படுகிறது.

தமிழ் மக்களும் தமிழ் கட்சிகளும் போராடவில்லை என்று இல்லை. ஆனால் அந்தப் போராட்டங்கள் ஒரு மையத்தில் இருந்து ஒருங்கிணைக்கப்படவில்லை. எல்லாப் போராட்டங்களையும் ஒரு மையத்திலிருந்து ஒருங்கிணைக்கும் மையக் கட்டமைப்பு இல்லை.

தாயகத்தில் மட்டுமல்ல புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் நிலைமை அப்படித்தான். அங்கேயும் ஒருங்கிணைந்த செயல்பாடுகள் இல்லை. கடந்த 16 ஆண்டுகளிலும் நீதிக்கான போராட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அடைவுகளைப் பெற்றிருப்பது புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தான்.

இன அழிப்புக்கு எதிரான தடைகள் தீர்மானங்களை நிறைவேற்றியதிலும் சரி இன அழிப்பு நினைவுச் சின்னங்களை நிறுவியதிலும் சரி இன அழிப்பை அனைத்துலக மயப்படுத்தியதிலும் சரி இன அழிப்பை நோக்கி ஐநாவும் உட்பட மனித உரிமை அமைப்புக்களின் கவனத்தை குவிய வைப்பதிலும் சரி இன அழிப்பு ஆவணங்களை வெளியிடுவதிலும் சரி ஒப்பீட்டளவில் அதிகம் உழைப்பதும் முன்னணியில் நிற்பதும் புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தான்.

புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தாயகத்தோடு ஒப்பிடுகையில் அதிகம் சுதந்திரமான.செல்வச் செழிப்புள்ள ஒரு சூழலுக்குள் வாழ்கின்றது. சுதந்திரமான ஒரு சூழலுக்குள் வாழ்வதால் அவர்கள் இன அழிப்புக்கு எதிராக தாயகத்தை விடவும் ஒப்பீட்டளவில் வினைத்திறனோடு போராடக் கூடியதாக உள்ளது. அதனால் நீதிக்கான ஈழத் தமிழர்களின் கடந்த 16 ஆண்டு காலப் போராட்டத்தில் போராட்டத்தின் கூர்முனை போல காணப்படுவது புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தான்.

ஆனால் அங்கேயும் ஒருங்கிணைவு இல்லை. மைய அமைப்பு இல்லை. தமிழர்கள் தாம் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளின் நிலைமைகளுக்கு ஏற்பவும் தமது கொள்ளளவுக்கு ஏற்பவும் அங்குள்ள தனிப்பட்ட நபர்களின் தியாகம், அர்ப்பணிப்பு, கடும் உழைப்பு போன்றவற்றுக்கு ஏற்பவும் வெவ்வேறு பரிமாணங்களில் நீதிக்கான அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார்கள்.

அங்கே ஒரு மைய அமைப்பு கிடையாது. ஐநா மையச் செயற்பாடுகளிலும் சரி ராஜதந்திர மட்டச் செயற்பாடுகளிலும் சரி இன அழிப்புக்கு எதிரான ஏனைய எல்லாச் செயற்பாடுகளிலும் அங்கே ஒரு மையத்திலிருந்து திட்டமிடப்படாத நிலைமை தான் காணப்படுகிறது.

இந்த விடயத்தில் தாயகத்தின் தொடர்ச்சியாகத் தான் புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பும் காணப்படுகின்றது.

அது மட்டுமல்ல. மேற்படி செயல்பாடுகளில் ஒரு அடிப்படையான தலைகீழ் பொறிமுறை உண்டு. அது என்னவெனில் புலம் பெயர்ந்த தமிழர்களின் இன அழிப்புக்கு எதிரான செயற்பாடுகள் அனைத்தும் அவர்கள் புலம் பெயர்ந்து வாழும் யதார்த்தத்துக்கு ஏற்ப முன்னெடுக்கப்படுகின்றவை. அவை தாயகத்திலிருந்து வழி நடத்தப்படுகின்றவை அல்ல. மாறாக இன அழிப்புக்கு எதிரான நீதிக்கான போராட்டம் என்பது தாயகத்திலிருந்து தான் வழிநடத்தப்பட வேண்டும். ஆனால் நடைமுறை அவ்வாறு இல்லை.

அதற்கு ஒரு பலமான காரணம் உண்டு. தாயக த்தில் பயங்கரவாத தடைச் சட்டம் உண்டு. அரசாங்கமும், ஏன் எதிர்க் கட்சிகளும் கூட நாட்டில் நடந்தது இன அழிப்பு என்பதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அண்மையில் கனடாவில் இன அழிப்பு நினைவுச் சின்னம் நிறுவப்பட்ட பொழுது அதற்கு எதிராக மஹிந்த குடும்பத்தின் சார்பாக நாமல் ராஜபக்ஷ என்ன சொன்னார்? ராஜபக்சகளின் வழக்கறிஞரும் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஆகிய அலி சப்ரி என்ன சொன்னார்?

எனவே இன அழிப்புக்கு எதிரான அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் தாயகத்தில் உள்ள கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் சில அடிப்படையான வரையறைகள் உண்டு. இது காரணமாகவே அவ்வாறான நடவடிக்கைகள் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் அதிகம் வினைத்திறனோடு முன்னெடுக்கப்படுகின்றன.

அதன் விளைவாகவே அமெரிக்கக் கண்டத்தில் இன அழிப்புக்கு எதிரான தடைகளும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. தாயகத்துக்கு வெளியே ஈழத் தமிழர்கள் அதிக தொகையில் வாழ்வது கனடாவில் ஆகும். அதனால் அங்கு சக்தி மிக்க தமிழ் வாக்காளர் தொகுதி ஒன்று எழுச்சி பெற்று வருகிறது. இது கனடாவின் வெளியுறவுத் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு வளர்ச்சியை எதிர்காலத்தில் பெறக்கூடும். சில மாதங்களுக்கு முன்பு பிரித்தானியாவும் அவ்வாறு தடைகளை விதித்திருக்கின்றது.

இவ்வாறாக கடந்த 16 ஆண்டுகளாக இன அழிப்புக்கு எதிரான நீதியைக் கோரும் ஈழத் தமிழர்களின் போராட்டத்தில் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய ராஜதந்திர வெற்றிகளை புலம் பெயர்ந்த ஈழத் தமிழ் சமூகம் பெற்றிருக்கின்றது. எனினும் அவை முழுமையானவை அல்ல.

இப்பொழுது தொகுத்துப் பார்க்கலாம். கடந்த 16 ஆண்டுகளிலும் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தில் மெது மெதுவாகவே தமிழ் மக்கள் முன்னேறி வருகிறார்கள். ஐநா இன்றுவரையிலும் இலங்கையில் நடந்தது இன அழிப்பு என்பதனை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும், நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டம் தாயகத்திலிருந்து வழிநடத்தப்படவில்லை. தாயகத்திலும் அதை வழி நடத்தத்தக்க மைய அமைப்பு இல்லை. இதனால் கடந்த 16 ஆண்டு கால நீதிக்கான போராட்டத்தில் பொருத்தமான ஒருங்கிணைப்புகள் இல்லை.

நீதிக்கான போராட்டத்தில் தமிழ் மக்கள் உலக சமூகத்தை தங்களை நோக்கித் திரட்ட வேண்டியவர்களாகக் காணப்படுகிறார்கள். உலகில் தமக்கு நட்பாக உள்ள நாடுகளின் ஆதரவையும் நிறுவனங்களின் ஆதரவையும் திரட்ட வேண்டியவர்களாகக் காணப்படுகிறார்கள். அவ்வாறு உலகத்தைத் திரட்டுவது என்றால் முதலில் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஒரு தேசமாகத் திரட்டி கொள்ள வேண்டும்.

ஆனால் தமிழ் மக்கள் தாயகத்தில் தங்களை ஒரு பலமான மக்கள் கூட்டமாக, தேசமாகத் திரட்டுமளவுக்கு தமிழ் தேசியக் கட்சி அரசியல் இல்லை. நடந்து முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தல் முடிவுகளும் அதன் பின்னரான அரசியல் உரையாடல்களும் அதைத்தான் காட்டுகின்றன.

வாக்களிப்பில் தமிழ் மக்கள் ஒரு தேசமாகத்தான் நிற்கிறார்கள். ஆனால் கட்சிகள் அவர்களை வாக்காளர்களாகப் பிரித்து வைத்திருக்கின்றன. இதுதான் 16 வது மே 18 இல் ஈழத் தமிழ் சமூகத்தின் கள யதார்த்தம்.

**- நிலாந்தன்**

# அம்ஷிகா (தற்)கொலை:- பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும்!

கட்டுரையாளர்:-
- அழகு குணசீலன் -

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசாங்கமாக பொறுப்பு வாய்ந்த ஒரு மகளிர் விவகார அமைச்சராக, ஒரு பெண்ணாக இன்னுமோர் பெண்ணுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதிக்கு எதிராக செயற்பட்டிருக்க வேண்டிய குரல் மகளிர் அமைச்சரின் குரலாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அது மக்களின் பக்கம் குற்றம் சாட்டும் குரலாக மாறியிருப்பது பொதுமக்களின் கருத்துச் சுதந்திரத்தை சட்டை செய்யாத, பதவியில் இருந்தும் தனது இயலாமையை வெளிப்படுத்துவதாக அமைந்திருப்பது துரதிஸ்டவசமானது என்று என்.பி.பி. அரசாங்கத்தின் மகளிர், சிறார் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ்க்கு காட்டமான கண்டனத்தை பதிலாக அளித்திருக்கிறார் சந்திரசேகரன் மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரன்.

கொழும்பு, பம்பலப்பிட்டி இராமநாதன் பெண்கள் கல்லூரியில் இடம் பெற்ற பாலியல் வன்முறை தொடர்பாக அமைச்சர் சரோஜா பாராளுமன்றத்தில் பேசுகையில் குறிப்பிட்ட குறித்த மாணவி மாணவியின் பெற்றோர், சமூக ஊடகங்களிடம் தீர்வை தேடல் பற்றிய கருத்துக்களுக்கு எதிர்வினையாக அனுஷாவின் பதில் அமைந்திருக்கிறது. பாராளுமன்றத்தில் இது விடயமாக மனோ கணேசன் எம்.பி.யும் அமைச்சர் சரோஜா பயன்படுத்திய வார்த்தைப் பிரயோகங்களை கண்டித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் பிரதமரும், கல்வி அமைச்சருமான ஹருணி அமரசேகர வெளியிட்டுள்ள கருத்தும் சிந்திக்கத்தக்கது. இவ்வாறு சிறுமி தற்கொலை செய்து கொண்ட தானது சமூகம் என்ற வகையில் நாம் தோல்வியடைந்துள்ளோம் என்பதை காட்டுகிறது . அப்படியானால் தோல்வியுற்ற அந்த சமூகம் எது? சமூகவியல் நெருக்கடிகளில் ஒரு சமூகத்திற்கு பாரிய பொறுப்புண்டு. ஆனால் இந்த பொறுப்புணர்ச்சி, பொறுப்புக்கூறல் ஒரு சமூகத்தில் தானாக ஏற்படுவதில்லை அதற்கான அடித்தளம் இடப்பட வேண்டும். அதைச் செய்யாமல் சமூகம் தோற்று விட்டது என்று தப்பிச்செல்லமுடியுமா? அப்படியானால் முறைமை மாற்ற அரசியலின் விளைவு என்ன?

மறுபக்கத்தில் இலங்கையில் இனம், மதம், பிரதேசம், திசைகளை கடந்த சமூகத்தை தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன என்று ஜனாதிபதி போற இடமெல்லாம். ஓதுவதும், இன, மதவாதமற்ற இலங்கை சமூகத்தை கட்டி எழுப்புவோம் என்று சூளுரைப்பதும் வெறும் கனவா? இதைத் தான் சமூகத்தின் தோல்வி என்று பிரதமர் கருதுகிறாரா? வேளாண்மையை பயிரிடாது, அதற்கான பராமரிப்பு தேவைகளை கவனத்தில் கொள்ளாது, பாதுகாக்காது அறுவடை எவ்வாறு திருப்தியான விளைச்சலாக இருக்க முடியும். இலங்கையில் ஆட்சியாளர்கள் தங்கள் அரசியலை வலது, இடது அரசியல் என்று தங்களைத் தாங்களே அடையாளப் படுத்திக் கொண்டாலும் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக ஒரு விடயத்தை அவதானிக்க கூடிய தாக இருக்கிறது. ஒரு பெண்ணாக இருந்தால் மகளிர் விவகார, சிறுவர் பாராமரிப்பு அமைச்சராக இருக்க அந்த தகுதி போதும் என்பதாகும்.

அதுவல்ல முக்கியம். பெண்ணாக இருப்பதை விடவும் முக்கியம் பெண்கள் விவகாரங்கள் தொடர்பான துறைசார் நிபுணத்துவம். இது இல்லையெனில் அதிகாரிகளால் எழுதிக் கொடுப்பதை வாசிப்பதுடன், கொள்கை வகுப்பில் தவறான பாதையூடாக பயணிக்கவும் வேண்டி ஏற்படும். அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்திற்கு கடற்றொழில் அமைச்சர் பதவி ஒதுக்கப்பட்டிருப்பது போன்றது தான் இதுவும்.

பாராளுமன்றத்தில் மகளிர் விவகார அமைச்சர் அம்ஷிகா மரணம் தொடர்பாக அளித்த பதில்கள் திருப்தியாக இல்லை. இதே குறைபாட்டை பிரதமர் ஹருணி, பிரதம கொறடா அமைச்சர் பிமல் அளித்த பதில்களும் கொண்டுள்ளன. அவர்கள் அளித்த வரையறுக்கப்பட்ட பதில்கள் காரணமாக, அரசாங்க தரப்பை விடவும் சம்பவத்தை விபரமாக அறிந்திருந்த எதிர்க்கட்சியினர் மேலும் விபரங்களை அறிய முற்பட்டனர். ஆனால் அகப்பை அரசாங்க தரப்பின் கைகளில் இருந்த போதும் பானையில் இருக்கவில்லை. இது சமூகத்தின் தோல்வியானால் இவர்களை தெரிவு செய்ததால் சமூகம் தோல்வியடைந்துள்ளது என்று சொல்லலாமா?

பாராளுமன்றத்தில் மேலதிக தகவல்களை அறிய விரும்பிய எதிர்த்தரப்பு தொடர் கேள்விகளை கேட்க வேண்டியதாயிற்று. உதாரணமாக நீங்கள் ஏன் நேற்றைய நிகழ்வுக்கு வரவில்லை? என்ற கேள்விக்கு எனக்கு சுகமில்லை என்று பதிலளிப்பது சரியானது தான். ஆனால் அதன் மூலம் நாம் கேள்வி கேட்டவருக்கு இன்னொரு கேள்விக்கான வாய்ப்பை வழங்குகிறோம். என்ன வருத்தம் – சுகவீனம்? என்பது அடுத்த கேள்வியாக இருக்கும். இதையே பாராளுமன்றத்தில் அவதானிக்க கூடியதாக இருந்தது. இதனால் தொடர் கேள்விகளை சந்திக்க மனனம் செய்யப்பட்ட பதில்களோடு வந்த பொறுப்பான அமைச்சர்களால் முடியவில்லை. அவர்கள் ஒரு வழிப் பாதையில் பயணித்து திரும்பி வரமுடியாத பரிதாபத்தில் இருந்தார்கள்.

இந்த நிலையில் அமைச்சர் பிமல் கூறிய பதில் இன்னும் வேடிக்கையானது. எதிர்கட்சி தலைவர், முஜிபுர் ரகுமான், மற்றும் பெரேரா எத்தனை தடவைகள் பேசியிருக்கிறீர்கள் என்று கணக்குப் பார்த்து எங்கள் பக்கத்தில் (அரசாங்கம்) இருபது பேர் இருக்கிறோம் அப்படியென்றால் அவர்கள் எல்லோருக்கும் இடம் கொடுக்க வேண்டும் என்று அவரது ஜே.வி.பி. பாணியில் வாதிடுகிறார். நீங்கள் 159 பேரும் பேசுவது யாருக்கும் பிரச்சினை இல்லை அதற்குத்தான் மக்கள் உங்களை தெரிவு செய்திருக்கிறார்கள். 159 பேரில் 20 பேர் தான் என்றால் .....? அதுவும் ஒரு வகையில் சேமிப்பா ...? ஆனால் அந்த மக்கள் உங்களிடம் இருந்து இந்த விவகாரத்தில் சரியானதும், தெளிவானதும், விபரமானதும், நம்பகத்தன்மை கொண்டதுமான பதிலை எதிர்பார்கிறார்கள். அந்த பதில் பாதிக்கப்பட்டவரின் நலன்களை பாதுகாப்பதாக இருக்க வேண்டுமே அன்றி பாதிப்பை ஏற்படுத்தியவர்களை பாதுகாப்பதாக இருக்க முடியாது. இதை எந்த தரப்பும் தங்கள் கட்சி அரசியலுக்கு பயன்படுத்த கூடாது தான். ஆனால் பொறுப்புக்கூற வேண்டிய அரசுதரப்பு அந்தப் பொறுப்பை, பொறுப்புடன் கையாளத நிலையில் மறுதரப்பு அரசியலாக்குவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. எதிர்கட்சியினர் பல விடயங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தனர். பாலியல் வன்முறைச்சம்பவம் ஒக்டோ பர் 23, 2025 இல் இடம்பெற்றுள்ளது. சந்தேகநபர் பொலிஸ் விசாரணைக் குட்படுத்தப்பட்டு மூன்று நாட்கள் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள் ளார். பின்னர் மாணவியை மாற்றலாகி செல்லுமாறு அதிபர் அழுத்தங்களை பிரயோகித்ததாக கூறப்படுகிறது. கவனிக்க: சந்தேகநபரான ஆசிரியர் இடமாற்றம் செய்யப்படவில்லை. மாணவி கொட்டாஞ்சேனையில் இராஜேஸ்வரி இன்சிரியூட்டில் பெப்ரவரி மாதமளவில் சேர்ந்ததாக அதன் நிர்வாகி தெரிவித்துள்ளார்.



அந்த காலத்தில் மாணவியின் உடல் நலம் பாதிக்கப்பட்டு இருந்ததையும் அவர் உறுதிப்படுத்துகிறார். மாணவியின் மரணம் 29, ஏப்ரல் 2025 இல் பாலியல் வன்முறை இடம் பெற்று சுமார் ஆறு மாதங்களுக்கு பின்னர் இடம் பெற்றுள்ளது. இதன் அர்த்தம் இந்த உளவியல் சித்திரவதையை அம்ஷிகா ஆறு மாதங்களாக தனக்குள் சுமந்துள்ளார். இந்த நிலையில் தான் ரியூட்டரியில் நடந்த(?) சம்பவம் மாணவியின் மரணத்திற்கான உடனடிக்காரணம் என சந்தேகிக்கப்படுகிறது. பம்பலப்பிட்டி, கொட்டாஞ்சேனை ஆகிய இடங்களில் இடம்பெற்ற போராட்டங்களை அடுத்தே சந்தேகநபரான ஆசிரியர் மே.08, 2025 இல் இடமாற்றம் செய்யப்பட்டார். அவரின் புத்தளத்திற்கான இடமாற்றத்திற்கு எதிராக புத்தளம் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

கல்வி அமைச்சின் இந்த இடமாற்றம் பாலியல் வன்முறை சந்தேகநபர் ஒருவர் குறித்த உளவியல் புரிந்துணர்வு தொடர்பான கேள்வியை எழுப்புகிறது. இந்த வன்முறையாளர்கள் போதை வஸ்து பழக்கம் போன்று இந்த வன்முறைக்கு பழக்கப்பட்டவர்கள். இவர்கள் சீர்திருத்த முகாம்களில் அடைக்கப்பட்டு கவனிக்கவும், கண்காணிக்கவும் படவேண்டியவர்கள் இதனால் அவர் குற்றவாளியா? நிரபராதியா? என்பது நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படும் வரை அவர் சந்தேகநபராக சம்பளத்துடன் பதவி நீக்கம் செய்யப்படுவதே சரியானது. அதைச் செய்யாமல் கல்வி அமைச்சு கதை சொல்கிறது. அத்தோடு அவர் குற்றவாளி இல்லை என்று தீர்பளிக்கப்பட்டாலும் அவரை மகளிர் பாடசாலைகள், கலப்பு பாடசாலைகளுக்கு நியமிக்காது செயற்பட வேண்டியதும், மாற்று வழியை தேட வேண்டியதும் கல்வி அமைச்சைச் சார்ந்தது. இந்த குளறுபடிகளுடன், தனியார் கல்லூரி உரிமையாளர் என்.பி.பி. யின் கொழும்பு மத்தி ஒருங்கிணைப்பாளர் என்பதாலும் அரசாங்கத்தின் மெத்தனப் போக்கில் மக்கள் சந்தேகம் கொள்கின்றனர். இதை போக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை.

இராமநாதன் மகளிர் கல்லூரியில் சில ஆசிரியர்கள் இடமாற்றம் வழங்கப்பட்டாலும் ஆசிரியர் சங்கத்தின் அனுசரணையோடு பல ஆண்டுகள் அங்கேயே பணியாற்றுகின்றனர். இது உண்மை. சந்தேகநபர் ஆசிரியர் சங்கம் ஒன்றில் மிகவும் செல்வாக்கு மிக்கவர். அதனாலேயே அவர் ஏற்கனவே இழைத்த குற்றத்திற்கு தண்டனை வழங்கப்படவில்லை என்று கூறுகிறது தமிழர் ஆசிரியர் சங்க அறிக்கை. இவ்வாறு பல பின்னணிகள் உள்ளன. இவற்றையெல்லாம் இலகுவாக தட்டிக் கழித்து விடயத்தை அரசியலாக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சிகளை கேட்கும் அரசாங்கம், சம்பந்தப்பட்டவர்களுடன் உள்ள தங்கள் தரப்பின் அரசியல் தொடர்புகள் குறித்து என்ன நிலைப்பாட்டை கொண்டுள்ளது.

பாலியல் வன்முறையில் ஈடுபடுபவர்கள் முன்பின் அறிமுகமற்ற யாரோ? எவரோ? அல்ல என்பது சர்வதேச ஆய்வுகளும், உளவியலாளர்களும் உறுதிப்படுத்தும் ஒன்று. குடும்ப உறவினர்கள், சந்தேகமற்ற வகையில் நெருக்கமாக பழகுபவர்கள், தொழில் நண்பர்கள், நிறுவனங்கள் சார்ந்து நம்பிக்கையுடன் கூட்டாக செயல்படுபவர்களே பாலியல் வன்முறையில் ஈடுபடுகிறார்கள்.

இந்த அடிப்படையிலே இலங்கையில் ஆண்களான ஆசிரியர்கள், அதிபர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள்..... அதிகாரிகள் போன்றோர் கல்வி, உயர் கல்வி நிறுவனங்களில் விரிக்கும் வலையில் பாடசாலை, பல்கலைக்கழக மாணவிகள் விழ்ந்து விடுகிறார்கள். இதில் ஒரு பகுதி பாலியல் இலஞ்சமாகிறது. இன்னும் எத்தனை அம்ஷிகாக்கள்.......?

# நிலத்தை இழந்தால் பலத்தை இழப்போம்! பலத்தை இழந்தால் இனத்தை இழப்போம்!

## அன்னை நிலத்தை மீட்க வந்த மீட்பர் தான் பிரபாகரன்

மொழி அழிந்தால் இனம் நிச்சயம் அழியும். இந்த வரலாற்று உண்மையை உணர்ந்து மொழியை மீட்கவும் காக்கவும் ஒருவன் வந்தான். நிலத்தை இழந்தால் பலத்தை இழப்போம். பலத்தை இழந்தால் இனத்தை இழப்போம் என்பதை உணர்ந்து அன்னை நிலத்தை மீட்க ஒரு மீட்பன் வந்தான். அவன் பெயர் பிரபாகரன்என. நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்

கோயம்புத்தூர்: நாம் தமிழர் கட்சி சார்பில் 'தமிழினப் பேரெழுச்சி பொதுக்கூட்டம்' கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் மே 18 நடைபெற்றது. இதில் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் திரிணாமூல் காங்கிரஸ் கட்சியின் எம்.எல்.ஏ மனோ ரஞ்சன் பயபாரி எழுத்தாளர் ஜக்மோகன் சிங் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் சீமான் பேசும் போது 'வரலாற்றில் புறக்கணிக்கப்பட்ட தமிழின மக்கள் சொந்த மண்ணிலேயே அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சாதி மதங்களால் பிளவுபட்டு தன்னின பகையால் மோதி ரத்தம் சிந்தி வீழ்ந்ததால் அரசியல் வலிமையற்றவர்களாக நிற்கிறோம். சிதைந்து அழிந்து கொண்டிருக்கும் தமிழினத்தை பாதுகாப்பாக வாழ வைக்க போராடித் தான் ஆக வேண்டும்.

தமிழன் என்று சொல்லும் போதே திமிரும் தைரியமும் வர வேண்டும். குனிந்து கும்பிடு போட்டு வாழ்க ஒழிக என்று கோஷம் போட்டால் உன்னை தூக்கி சுடுகாட்டில் போடுவார்கள். நாம் தமிழர் கட்சி மட்டுமே 'தமிழ் தாய் வாழ்க தலைவர் பிரபாகரன் வாழ்க' என்ற முழக்கங்களை முன் வைத்து அடிமைப்பட்ட தமிழ் தேசிய மக்களின் உரிமை மீட்சிக்கு போராடும் மக்கள் இராணுவம்.

மானம் அறம் வீரம் என வாழ்ந்த மறவர் கூட்டம் நாம். கடல் கடந்து நிலப்பரப்பை வென்று உலகத்தின் மூன்றாவது பெரிய வல்லரசை நிறுவிய ராஜராஜ சோழன் வாரிசுகள் நாம். யாரையும் அடிமைப்படுத்தி வாழ்ந்ததாக சரித்திரமே இல்லை. அப்படிப்பட்ட எங்களை சிங்களவன் அடிமைப்படுத்த நினைத்தால் விடுவதற்கு நாங்கள் பூனையோ எலியோ அல்ல... புலிகள்.

மூவேந்தர் வாரிசுகளான நாம் முள்ளிவாய்க்காலில் முடங்கிய நாள் இன்று. பச்சிளம் குழந்தைகள் பாஸ்பரஸ் குண்டுகளுக்கு செத்து மடிந்த நாள். ஈக்களும் எறும்புகளுக்கும் இரக்கம் காட்டியவர்கள் இரக்கமின்றி கொல்லப்பட்ட நாள். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என உலகத்தை தழுவி பாடியவர்கள் இரக்கமின்றி கொல்லப்பட்ட நாள்.

என் மண்ணின் மக்கள் மரணித்த போது உலகில் ஒருவன் கூட அழவில்லை. இது வரலாற்றில் துயரம். எங்களுக்காகவும் பேசுங்களேன் என்று ஈழத்து குரல்கள் ஒலித்தன. உயிரைக் காப்பாற்ற பதுங்கிய பதுங்குழிகளே புதை குழிகளாக மாறின. ரத்தமும் கண்ணீரும் சுமந்து பிரசவித்த தாய் தன் வயிற்றுக்குள் பிள்ளைகளை வாங்கிக் கொண்ட அவலம் நிகழ்ந்தது.

13 கோடி மக்கள் தொகை கொண்ட தமிழர்கள் ஏன் சுதந்திரமாக வாழக் கூடாது? ஒரு இனம் தனக்கென ஒரு





நாட்டை அடையும் போது தான் முழுமையான விடுதலை அடையும். உலகில் எல்லா மொழிகளும் மனிதன் பேசிய மொழி. ஆனால் தமிழ் இறைவன் பேசிய மொழி. சிவன் முருகன் மாயோன் ஆகியோர் என் மூதாதையர்கள்.

கடவுளை கடன் கொடுத்த இனத்தின் மக்கள் நாங்கள். உலக அறிஞர்களால் நன்கு கட்டமைக்கப்பட்ட ஒரே மொழி தமிழ். தனித்து இயங்கக்கூடிய செம்மொழி. இந்த மொழி அழிந்தால் இனம் நிச்சயம் அழியும். இந்த வரலாற்று உண்மையை உணர்ந்து மொழியை மீட்கவும் காக்கவும் ஒருவன் வந்தான். நிலத்தை இழந்தால் பலத்தை இழப்போம். பலத்தை இழந்தால் இனத்தை இழப்போம் என்பதை உணர்ந்து அன்னை நிலத்தை மீட்க ஒரு மீட்பன் வந்தான். அவன் பெயர் பிரபாகரன்.

தமிழ் பேரினத்தின் வரலாறாகவே வாழ்ந்தான். அவன் வெடித்த முதல் தோட்டா உலகத்தையே அதிர வைத்தது. 200 ஆண்டுகளுக்கு பிறகு என் இனம் எப்படி வாழ வேண்டும் என்று கனவு கண்டான். ஆனால் உலகப் போரால் அந்த கனவு நசுக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என்று சொன்னது இந்த ஆட்சியாளர்கள் தான். இனத்தை கொன்று குவித்தவர்களுக்கே வரிசையில் நின்று வாக்கு செலுத்தி அடிமையாக வாழ்கிறோம்.

போரை நடத்தியது காங்கிரஸ். அவர்களுடன் நின்றவர்கள் திமுக. போராடி நிறுத்த வேண்டிய உயரத்தில் இருந்தவர்கள் அதிமுக. 2ஜி அலைக்கற்றைக்காக பாராளுமன்றத்தை முடக்கிய பாஜக. தமிழினத்தின் எதிரிகள் இவர்கள் நான்கு பேரும் தான் என்றார்.

# கருவறுக்கப்படும் ஒரு சமூகத்தின் கடைசி அதிகாரத் தளம் உள்ளூராட்சி!

மிக நீண்ட தாமதங்கள் எதிர்பார்ப்புகள் மத்தியில் உள்ளூராட்சித் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கேள்விக்குறியொன்று இருந்த நிலையில், இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் மிகவும் கவனமாகவும், நிதான மாகவும் சிந்தித்து தமிழ் மக்கள் வாக்களித்து இருக்கின்றார்கள்.

இந்த உள்ளூராட்சி தேர்தலின் பின்பு வென்ற நீங்கள் எவ்வாறு நடந்து கொள்ளப் போகின்றீர்கள் என்பதனை வைத்துத் தான் வரும் மாகாண சபைத் தேர்தலில் மக்கள் உங்களை கையாள்வார்கள்.

மிகவும் ஒடுக்கப்பட்டு, ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்டு, சிதைக்கப்பட்டு, இன்னமும் கருவறுக்கப்படும் நிலையில் இருக்கின்ற சமூகத்தின் கடைசி உரிமைத் தளமாக இருப்பது இந்த உள்ளூராட்சி.

உள்ளூர் சமூகங்கள் கட்டமைக்கப்பட வேண்டும். அந்த சமூகங்கள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். அந்த சமூகங்கள் தமக்குள் எதிர்கொள்கின்ற சவால்கள் அவர்களால் வெற்றி கொள்ளப்பட வேண்டும். அதற்கேற்ற முறையில் அவர்கள் வலுவூட்டப்பட வேண்டும். சமூக நிறுவனங்கள் பலமாக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு வட்டாரத்துக்குமென பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் போது அந்த வட்டாரத்துக்கென தலைமைத்துவம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதனை நாங்கள் முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வட்டாரப் பிரதிநிதியையும் அதற்கு மேலதிகமாக நியமிக்கப்படும் பிரதிநிதியையும் நாங்கள் கௌரவிக்க வேண்டும். அங்கீகரிக்க வேண்டும். அவர்களுக்கு முதன்மையான பாத்திரத்தை நாங்கள் வழங்க வேண்டும்.

# எனது சகோதரர் காணாமல் போனமைக்கு பிள்ளையானே காரணம்! எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை - பேராசிரியர் ரவீந்திரநாத்தின் சகோதரர்



எனது சகோதரர் காணாமல் போனமைக்கும் பிள்ளையானிற்கும் தொடர்புள்ளது என நான் உறுதியாக நம்புகின்றேன் இது குறித்து எனது மனதில் எந்த சந்தேகமும் இல்லை என 2006 இல் காணாமலாக்கப்பட்ட கிழக்கு பல்கலைகழக துணைவேந்தர் பேராசிரியர் ரவீந்திரநாத்தின் சகோதரர் ராஜ் தமிழ் கார்டியனிற்கு தெரிவித்துள்ளார்

தமிழ் கார்டியனிற்கு வழங்கியுள்ள பேட்டியில் அவர் தெரிவித்துள்ளதாவது

கேள்வி– உங்கள் சகோதரர் பற்றியும் அவர் எவ்வாறானவர் என்பது பற்றியும் தெரிவிக்க முடியுமா?

பதில்–எனது சகோதாரர் சிறுவயதிலேயே மிகுந்த புத்திசாலி. அவர் அமைதியானவர் சிந்திப்பவர், யாழ்ப்பாணம் இந்து கல்லூரியில் அவர் கல்வி பயின்றார், கல்வியில் சிறந்து விளங்கியமைக்காக பெயர் பெற்றார், காலப்போக்கில் அவர் ஒரு கௌரவமான வாழ்க்கையை உருவாக்கி பேராசிரியராகவும் பின்னர் கிழக்கு பல்கலைகழக துணைவேந்தராகவும் மாறினார்.

மக்கள் எப்போதும் அவரை போற்றினார்கள் அவர் மற்றவர்களை கண்ணியத்துடன் நடத்தினார். ஈழப்போராட்டத்தை பொறுத்தவரை அவர் ஆயுத போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொள்வில்லை, ஆனால் தனது வழியில் அதற்கு பங்களிப்பு செய்தார்.

விவசாயத்தில் கலாநிதி பட்டம் பெற்றவர் என்பதால் தனது அனுபவத்தை விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொண்டார். குறிப்பாக மட்டக்களப்பில் விவசாயம் மீன்பிடித்துறைகளை வளர்ப்பதற்கு உதவினார்.

அவரது பணி காரணமாக அவர் விடுதலைப்புலிகளின் தலைவருடன் பல முறை தொடர்பு கொண்டார், விடுதலைப்புலிகள் இயக்கத்தில் கருணா பிள்ளையான் இருந்தவேளை அவர்களுடன் தொடர்பிலிருந்தார்.

கேள்வி– 2006ம் ஆண்டு உங்கள் சகோதரர் கடத்தப்படுவதற்கு முன்னர் இடம் பெற்ற சம்பவங்கள் குறித்து தெரிவிக்க முடியுமா?

பதில்– அவ்வேளை கிழக்குபல்கலைக் கழகத்தில் பல பிரச்சினைகள் காணப்பட்டன, ஊழல்கள் காணப்பட்டன அதற்கு காரணமானவர்களை எச்சரித்த எனது சகோதரர் அவற்றை நிறுத்துமாறு உத்தரவிட்டார்.

இது இயல்பாகவே பதற்றத்தை உருவாக்கியது. எனது சகோதரர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்ற அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன பின்னர் அவை அச்சுறுத்தல்களாக மாறின.

கருணா பிள்ளையான் அவர்களுடன் தொடர்புபட்டவர்களிடமிருந்து அவர் அச்சுறுத்தல்களை எதிர ˙கொண்டார். அவரது குடும்பத்தின் பாதுகாப்பு அவரின் கரிசனைக்குரிய விடயமாக மாறியது.

ஆனால் இத்தனைக்கு அப்பாலும் அவர் மட்டக்களப்பில் தங்கியிருந்து தனது பணியை தொடர முயன்றார், ஆனால் இறுதியில் நிலைமை மிகவும் ஆபத்தானதாக மாறியது. அவர் பாதுகாப்பிற்காக கொழும்பிற்கு செல்ல தீர்மானித்தார்.

நான் அவரை லண்டனிற்கு வருமாறு மன்றாடிக் கேட்டேன் ஆனால் அவர் மறுத்து விட்டார். அவர் உத்தியோக பூர்வமாக தனது பதவியை இராஜினாமா செய்ய திட்டமிட்டிருந்தார்.

அவரின் இறுதி தொலைபேசி உரையாடல் எனக்கு நினைவில் இருக்கின்றது, 2006 டிசம்பர் 15ம் திகதி இறுதி நிர்வாக கூட்டத்தில் கலந்து கொள்ளப் போவதாக அவர் தெரிவித்தார். அவருடன் நான் தொலைபேசியில் உரையாடியது அதுவே இறுதித் தடவை.

கேள்வி– அதிகாரிகள் அவ்வேளை எவ்வாறு செயற்பட்டனர்? இந்த விடயத்தை தீவிரமாக எடுத்தனரா?

பதில்–அதிகாரிகள் இந்த விடயத்தை தீவிரமாக எடுத்திருந்தால் அவருக்கு என்ன நடந்தது என்பது தற்போது எங்களிற்கு தெரியவந்திருக்கும். அவர்கள் அதனை புறக்கணித்தனர் என்பதற்கு அப்பால் இடம்பெற்ற விடயங்களுடன் தொடர்புபட்டிருந்தனர்.

எனது சகோதரர் பதவி விலகியவேளை பாதுகாப்பு கோரி கோட்டாபய ராஜபக்சவிற்கு கடிதமொன்றை எழுதினார். இறுதி கூட்டமன்றும் விசேடமாக பாதுகாப்பை கோரினார், ஆனால் அவர்கள் உரிய பாதுகாப்பை வழங்கவில்லை.

மாறாக அவர்கள் அந்த இறுதி கூட்டத்தில் அவர் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும் என வற்புறுத்தினார்கள். தனது நிலையை நிரூபிப்பதற்கான மின்னஞ்சல் கடிதம் அவரிடமிருந்தது. ஆனால் அவர்கள் அவரை கைவிட்டனர். அவர் காணாமல் போனதில் அவர்களிற்கு தொடர்புள்ளது.

கேள்வி– பிள்ளையான் சமீபத்தில் விசாரணை செய்யப்பட்டமைகுறித்து உங்கள் கருத்து என்ன? உங்கள் சகோதரர் காணாமல ˙போனமைக்கும் இதற்கும் தொடர்பிருக்குமா?

பதில்– எனது சகோதரர் காணாமல் போனமைக்கும் பிள்ளையானிற்கும் தொடர்புள்ளது என நான் உறுதியாக நம்புகின்றேன் இது குறித்து எனது மனதில் எந்த சந்தேகமும் இல்லை, பல்கலைகழகத்தில் இடம்பெற்ற ஊழல்களிற்கும் பிள்ளையானிற்கும் தொடர்புள்ளது என தெரிவிக்கும் பத்திரிகை செய்திகளை நான் வாசித்துள்ளேன்,

எனது சகோதரர் இந்த ஊழல்களை எதிர்த்தார். எனது சகோதரர் ஒருபோதும் ஊர்க்கதைகளை கதைத்தவர் இல்லை அரசியலில் ஈடுபட்டவர் இல்லை, அவர் சரியானதை தான் செய்தார், அப்படித் தான் வாழ்ந்தார்.

கேள்வி – பிள்ளையானிற்கு எதிரான விசாரணை அரசியல் நோக்கங்களை கொண்டதா அல்லது உண்மையானதா? உங்களின் கருத்து என்ன?

பதில் – முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் உண்மையானவை. ஆனால் அரசாங்கத்தின் விசாரணைகள் நீதிதொடர்பானவை அல்ல. இது அரசியல் தொடர்பானது. பல அரசாங்கங்கள் வந்து சென்றிருக்கின்றன, இவர்களில் எவரும் நீதியை வழங்குவார்கள் என நான் எதிர்பார்க்கவில்லை.

கேள்வி – இலங்கையில் நீதி என்பது தெரிவு செய்யப்பட்டதாக அல்லது தாமதிக்கப்பட்டதாக விளங்குகின்றது குறிப்பாக தமிழர் விடயத்தில் என்ற கருத்து குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

பதில்– இலங்கையில் தமிழர்களிற்கு நீதி என்பது இல்லை. நாங்கள் பல வருடங்களாக இதனை தெரிவித்து வருகின்றோம். முக்கியமான விடயம் நாங்கள் மக்களாக ஐக்கியப்படவில்லை. இந்த நிலை மாறும்வரை நாங்கள் துன்பங்களை அனுபவிப்போம். உண்மையான மாற்றம் ஏற்படவேண்டும் என்றால் பிரபாகரன் போன்று இன்னுமொரு தலைவர் உருவாக வேண்டும் என்றார்.

## என்.பி.பி. பக்கம் சாய்ந்தார் மனோவின் தம்பி



மனோகணேசனின் தம்பி பிரபா கணேசன் தலைமையிலான ஜனநாயக தேசிய கூட்டணி தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிப்பதாக செயற்குழு கூட்டத்தில் ஏகமானதாக தீர்மானிக்கப்பட்டு ள்ளது. 22ஆம் திகதி வியாழக்கிழமை மாலை ஆறு மணிக்கு ஜனநாயக தேசிய கூட்டணியின் செயற்குழு கூட்டம் அதன் தலைவர் பிரபா கணேசன் தலைமையில் பம்பலபிட்டி தலைமை காரியாலயத்தில் இடம் பெற்றது. இதன் போது கொழும்பு மாநகர சபையில் ஜனாதிபதி தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிப்பதாக ஏகமானதாக தீர்மானிக்கப்பட்டது.

ஜனநாயக தேசிய கூட்டணிக்கு கொழும்பு மாநகர சபை உட்பட கிடைக்கப் பெற்ற பத்து ஆசனங்கள் மக்களின் அபிவிருத்திக்காகவே பயன்படுத்தப்படும் என்றும் அரசாங்கம் மக்கள் விரோத செயல்பாடுகளை முன்னெடுத்ததால் ஆதரவினை வாபஸ் வாங்க தயங்க மாட்டோம் என ஜனநாயக தேசிய கூட்டணி தலைவர் பிரபா கணேசன் ஊடகங்களுக்கு தெரிவித்தார். இன்னும் பல சுயேட்சைக் குழுக்கள் அநுரவுக்கு முதரவு தெரிவித்து வருகின்றன.


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்

சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை

அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)

அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு

சைவக்குருக்களை

தொடர்பு கொள்ளவும்

"இணுவில் திருவூர்"

சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்

647.629.5468

msvkurukkal@gmail.com

# இலங்கையில் நடந்த போரை வெற்றியாக நான் பார்க்கவில்லை! இராணுவ வீரர்கள் நினைவு நாளில் அநுராவின் துணிச்சலான பேச்சு!



அதிகார மோகமுடையவர்கள் வடக்கிலும், தெற்கிலும் மீண்டும் இனவாதத்தை தூண்ட ஆரம்பித்துள்ளனர். இனவாதம் தலைதூக்குவதற்கு இனி ஒரு போதும் இடமளிக்கப்பட மாட்டாது. காலத்துக்கு காலம் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும், அதனைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும், தாம் செய்த குற்றங்களை மறைப்பதற்காகவும் யுத்தம் பயன்படுத்தப்பட்டுள்ளது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கடந்த 19 மே 2025 திங்கட்கிழமை கோட்டை ஸ்ரீஜெயவர்தனபுரவில் போர் வீரர் நினைவு தூபி அமைந்துள்ள மைதானத்தில் 16ஆவது தேசிய போர் வீரர் நினைவு நாள் இடம் பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

யுத்தத்தை நிறைவு செய்வதற்காக படை வீரர்கள் பலர் தமது உயிரைத் தியாகம் செய்துள்ளனர். இந்த தூபி முழுவதும் நிரம்புமளவுக்கு அவர்களது பெயர்கள் பொதிக்கப்பட்டுள்ளன. அதே போன்று பெருமளவானோர் வாழ்நாள் முழுவதும் அங்கவீனமுற்றவர்களாகியுள்ளனர். இந்த நாடு எந்நாளும் அவர்களுக்கு கடன்பட்டுள்ளது.

இந்த தூபியில் தனது மகனின் பெயர் உள்ளதா? தனது கனவனின் பெயர் உள்ளதா? தனது தந்தையின் பெயர் உள்ளதா? என உறவுகள் தேடித்தேடித் துயருவதைப் பார்த்திருக்கின்றோம். இது மாத்திரமா? வடக்கிலும் இதே நிலைமை தான். அங்குள்ளவர்கள் தமது பிள்ளைகளையும், கனவர்மாரையும், பெற்றோரையும் இழந்தவர்கள் அவர்களது புகைப்படங்களை வைத்து கண்ணீருடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அனைத்து பெற்றோருக்கும் தமது பிள்ளைகள் பிள்ளைகள் தான். ஆனால் இவர்களது தமது பிள்ளைகள் மாணிக்கங்களாவர். 1980களிலிருந்து படுகையிலேயே தமது காலத்தைக் கழிக்கும் முன்னாள் படை வீரர்கள் இன்றும் இருக்கின்றனர். எதிர்கால சந்ததியினருக்கு அவ்வாறான சமூகத்தை நாம் வழங்கி விடக் கூடாது. இவ்வனைத்து அழிவுகளும் தானாகத் தோன்றியவை அல்ல.

காலத்துக்கு காலம் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும், அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும், அதிகாரத்தைப் பயன்படுத்தி செய்த குற்றங்களை மறைப்பதற்காகவும் யுத்தத்தைப் பயன்படுத்தியிருக்கின்றனர். பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்க இதனை அடிப்படையாகக் கொண்ட பின்னணியிலேயே இரண்டரை ஆண்டுகள் சிறையிலடைக்கப்பட்டார்.

அவர் என்ன தவறு செய்தார்? அதிகாரத்தினாலேயே அவர் சிறையிலடைக்கப்பட்டார். மாறாக அங்கு சட்டமோ நீதியோ காணப்படவில்லை. இவ்வாறு தான் வரலாற்றில் மோதல்களும், யுத்தங்களும் அதிகாரத்தை பாதுகாத்து உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும், அதனை பலப்படுத்திக் கொள்வதற்காகவும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. வடக்கிலும், தெற்கிலும் உள்ள எமது பிள்ளைகள் அவற்றுக்கான சாட்சிகளாகவுள்ளனர்.

இவ்வாறான பேரழிவை ஏற்படுத்தி யுத்தம் ஏற்படுவதற்கு எவ்வித பங்களிப்பும் செய்திராத, அதனுடன் எந்த தொடர்பும் இல்லாத இளைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவோ, அதனை தக்க வைத்துக் கொள்வதற்காகவே இனவாதம், அடிப்படைவாதத்தை பரப்பாத அதற்காக பாடுபடாத கிராமங்களிலுள்ள பெற்றோரின் பிள்ளைகள் உயிரிழந்துள்ளனர்.

அதிகாரத்துக்காக அன்றும் அவ்வாறு தான். இன்றும் அவ்வாறு தான். அதிகார மோகத்தால் உருவாக்கப்படும் யுத்தம் என்பது பேரழிவாகும். எவ்வாறிருப்பினும் மக்களால் நிராகரிக்கப்பட்ட தோல்வியடைந்த சில குழுவினர் யுத்தம் என்பது ஆசீர்வாதம் என நினைக்கின்றனர். அது அவர்களுக்கு தான். ஆனால் எமக்கு அவ்வாறல்ல. இந்த குரல்களுக்கு நாம் இனியும் அஞ்ச வேண்டுமா?

அமைதியையும், நல்லிணக்கத்தையும் காட்டிக் கொடுப்புக்களாக திரிபுபடுத்தியிருக்கின்றனர். தற்போதுள்ள படை வீரர்கள் இப்போது எம் கைகளிலுள்ள துப்பாக்கிகள் எந்த சந்தர்ப்பத்திலும் இயக்கப்படக் கூடாது என்றே எண்ணுகின்றனர். ஆனால் மிகச்சிறிய குழுவொன்று அவற்றை ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் பயன்படுத்தச் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றனர்.

அவ்வாறான சந்தர்ப்பத்தை ஏற்படுத்த இடமளிக்கப் போவதில்லை என்பதை நாம் அச்சமின்றி கூற வேண்டும். அமைதியை நிலை நாட்டுவதற்கான எந்தவொரு தீர்மானத்தையும் எடுப்பதற்கு நாம் தயார். எவ்வாறிருப்பினும் இனவாதம் மீண்டும் வெளிவர ஆரம்பித்துள்ளது. அதிகார மோகமுடையவர்கள் வடக்கிலும், தெற்கிலும் மீண்டும் இனவாதத்தை தூண்ட ஆரம்பித்துள்ளனர். எனினும் அது தலைதூக்குவதற்கு இனி ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது என்றார்.

இலங்கையில் நடந்த போரை நான் ஒரு வெற்றியாக பார்க்கவில்லை' நாங்கள் முன்னர் வெற்றி என அழைத்தது உண்மையில் மௌனமான ஒரு தருணம், காயங்களை ஆற்றுவதன் மூலம் இடம் பெறாத ஒரு விடயம், ஆனால் சோர்வின் மூலம் சாத்தியமான ஒரு விடயம். இதுஅமைதியின் விடியல் இல்லை, மாறாக உயிர் பிழைத்தலின் நிழல்.

யுத்தம் ஈவிரக்கமற்ற தன்மைக்கு முடிவை காணவில்லை மாறாக அதனை இயல்பான விடயமாக்கி யது. அது ஒரு தலைமுறைக்கு உடைந்த இதயங்களுடன் வெற்று நம்பிக்கைகள் மற்றும் சொல்லப் படாத துயரங்களுடன் வாழ கற்றுக் கொடுத்தது.

மிகவும் அடிப்படையான மனித பண்புகளான இரக்கம், சமத்துவம், கண்ணியம் ஆகியவை சுயநலம் மற்றும் பயத்தின் கீழ் புதைக்கப்பட்டன.

தேசிய ஒற்றுமை என்ற பெயரில் வெற்றி பெற்றவர்கள் தோல்வியடைந்தவர்கள் தேசபக்தர்கள் துரோகி கள் நினைவில் இருப்பவர்கள் மற்றும் மறக்கப்பட்டவர்கள் என புதிய சமூக பிளவுகளை உருவாக் கினோம். இந்த அடையாளங்கள் உண்மை அல்லது நீதியின் அடிப் படையில் கட்டமைக்கப்பட வில்லை. மாறாக விலக்கி வைத்தல் என்ற பலவீனமான அடித்தளத்தில் கட்டமைக்கப்பட்டன.

பதினைந்து ஆண்டுகளின் பின்ன ரும் இலங்கையில் நாங்கள் இந்த மரபினால் துயரங்களை அனுபவிக் கின்றோம்.

இனம், மதம் அல்லது பிராந்திய த்தை பொருட்படுத்தாமல் ஒவ்வொரு பிரஜையும் சமமாக பங்கேற்கவும், சுதந்திரமாக பேசவும் கண்ணியமாக வாழவும், அனுமதி க்கும் ஒரு சிவில் சமூகத்தை கட்டியெழுப்ப தவறி விட்டோம்.

வீதிகளை அமைத்துள்ளோம். ஆனால் நல்லிணக்கத்தை உரு வாக்கவில்லை.

தேர்தல்களை நடத்தியுள்ளோம். ஆனால் பொறுப்புக்கூறலை இன்னமும் உருவாக்கவில்லை.

இறந்தவர்களை எண்ணி விட் டோம். ஆனால் உயிருடன் உள்ள வர்களை இன்னமும் செவிமடுக்க வில்லை.

போரின் உளவியல் காயங்களை நாங்கள் உண்மையிலேயே குணப்படுத்தி விட்டோமா? அந்த காயங் கள் தொடர்ந்தும் மாறாமலிருப்ப தாக நாம் நினைத்தால் நாங்கள் ஏன் இன்னமும், வெற்றிக்காக செலுத்திய விலையை பற்றி சிந்தி ப்பதற்கு பதில் யுத்த வெற்றியை கொண்டாடுவதற்கு நிர்ப்பந்திக்கப் படுகின்றோம்?

நாம் இன்னமும் மௌனத்தை அமைதி என்றும் ஒழுங்கை நீதி என்றும் தவறாக புரிந்துகொள்கின்றோம்.

போர் முடிவடைந்து மற்றுமொரு ஆண்டை நாங்கள் குறிக்கும் இந்த தருணத்தில்வென்று நிலம் கொள்ளுதலை கொண்டாடுவதை தவிர்ப்போம் பணிவுடனும் நேர்மையுடனும் நாம் சிந்திப்போம்.

ஒவ்வொரு இலங்கையரும் தனது சொந்த வீட்டில் இருப்பதாக உணரும் போது தான் உண்மையான வெற்றி கிடைக்கும், எந்த சமூக மும் அச்சுறுத்தலானதாக காணப்படாமலும், எந்த பிரஜையும் அரசாங்கத்தினால் கை விடப்பட்டதாக உணராமல் இருக்கும் போது தான் உண்மையான வெற்றி சாத்தியம்.

அதுதான் நாங்கள் ஒருவருக்கு கொருவர் கடன்பட்டிருக்கும் அமைதி அது தான் நாம் இன்ன மும் வெல்லப்படாத சுதந்திரம் என்றார்.

# நான் பிரபாகரனுக்குச் சிலை வைப்பேனா?



பிரபாகரனுக்கு சிலை வைப்பது தொடர்பில் நான் ஒரு போதும் எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை. நாட்டில் நல்லுறவை கட்டியெழுப்புவதற்கு நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை தடுப்பதற்கு எதிர்க்கட்சியினர் மேற்கொள்ளும் பொய் பிரசாரமாகும் என அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 22 மே 2025 வியாழக கிழமை ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நான் சபையில் இல்லாத சந்தர்ப்பத்தில் ஹர்ஷண ராஜகருணா எம்பி தவறான கூற்றொன்றை நான் கூறியதாக சபையில் தெரிவித்துள்ளார். பிரபாகரனுக்கு சிலை வைப்பது தொடர்பாக நான் சபையில் தெரிவித்ததாகவும் அர்ச்சுனா எம்பி அதனை அவருக்குக் கூறியதாகவும் அவர் இங்கு குறிப்பிட்டுள்ளார். எனினும் எந்த சந்தர்ப்பத்திலும் நான் அவ்வாறு எதனையும் கூறவில்லை. எனது கட்சியின் தலைவர் ரோஹண விஜேவீர. நான் அவருடன் நெருக்கமாகப் பழகியவன். அவர் மறைந்தாலும் அந்த நினைவுகளும் உணர்வுகளும் என்றும் எனக்குள் இருக்கின்றன.


அதேபோன்று 89ஆம் ஆண்டு மரணமடைந்த பெருமளவானோர் உள்ளனர். அவர்கள் இன்றும் எமது உள்ளத்தில் நிலைத்திருக்கின்றனர்.

அவ்வாறு எங்கள் அனைவருக்கும் தலைமைத்துவம் வழங்கிய எமது தலைவர் ரோஹண விஜேவீரவுக்கு சிலை வைக்க வேண்டும் என்று கூட நான் இதுவரை எங்கும் கூறியதில்லை. அவ்வாறான நான் வேறு ஒருவருக்கு சிலை வைப்பது தொடர்பில் கூறுவேனா? அந்த வகையில் மேற்படி கூற்று முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.


எதிர்க்கட்சியினர் கூறுவதற்கு எதுவும் இல்லாமல் இந்தளவு அடிமட்டத்திற்கு சென்றுள்ளனர் என்பது தொடர்பில் நான் கவலையடைகின்றேன்.

இந்த நாட்டில் மரணமடைந்தவர்கள் பாரிய அளவில் உள்ளனர். அவ்வாறு மரணமடைந்த அனைவருமே எமது சகோதரர்கள். அவர்களுக்காக நான் முன் நிற்பேனே தவிர, ஒரு நபர் அல்லது ஒரு தலைவருக்காக நான் முன்னிற்க மாட்டேன்.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! முடங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பிடிக்கும். நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள் நண்பர்கள் கை கொடுப்பார்கள். மனதில் இருந்து வந்த சஞ்சல நிலை மாறும். தருமசிந்தனை உண்டாகும். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். பழைய பாக்கிகள் வசூல் செய்வதில் வேகம் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கலாம்.





ரிஷபராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் இருந்த தடுமாற்றம் நீங்கும். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். பணவரத்து திருப்தி தரும். எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். எந்த வேலையை முதலில் கவனிப்பது என்று குழப்பம் வரும். மேலிடத்துடன் இருந்து வந்த கருத்து மோதல்கள் நீங்கும்.





மிதுனராசி அன்பர்களே! மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். எந்த ஒரு காரியமும் சாதகமாக முடியும். விருப்பமானவர்களுடன் சந்திப்பு ஏற்படும். வாக்கு வன்மையால் நன்மையை தரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப் பளு. வீண் அலைச்சல் குறையும். அதிகாரம் அந்தஸ்து கிடைக்கும்.





கடகராசி அன்பர்களே! வீண் வாக்குவாதம் ஏற்படும். மற்றவர்களிடம் அனுசரித்து செல்வது நன்மை தரும். பயணம் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். கடித போக்குவரத்து நன்மை தரும். பழைய வீட்டை புதுப்பிப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் சுமையாக வரும். சாமர்த்தியமாக பழகி அனுகூலம் அடைவீர்கள்.




சிம்மராசி அன்பர்களே! தடைப்பட்டிருந்த பணவரத்து வந்து சேரும். உடல் ஆரோக்கியம் சீராகும். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் கூடுதல் செலவை சந்திக்க நேரிடும். தேவையான உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணி காரணமாக உடல் சோர்வு உண்டாகலாம்.




கன்னிராசி அன்பர்களே! பொறுப்புகள் அதிகரிக்கும். வீட்டை விட்டு வெளியே தங்க நேரிடும். தேவையில்லாத வீண் செலவுகள் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருந்தாலும் முடிவில் லாபம் கிடைக்கும். புதிய ஆர்டர்கள் வரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் உழைப்புக்கு ஏற்ற பலனை அடைவார்கள். புதிய வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும்.




துலாம் ராசி அன்பர்களே! தைரியமாக எந்த காரியத்தையும் செய்து முடிப்பீர்கள். சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். வாகனங்களை ஓட்டிசெல்லும் போது கவனம் தேவை. வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். எந்த காரியத்திலும் விட்டு கொடுத்துச் செல்வது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான விவகாரங்களில் தாமதம் ஏற்படலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றம், பதவி இறக்கம் ஆகியவற்றை சந்திக்க வேண்டி இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். மற்றவர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்படாமல் கவனமாக இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வேலையில் கவனமாக இருப்பது நல்லது. வேறு வேலைக்கு முயற்சி செய்பவர்கள் சிறிது காலம் தள்ளிப் போடுவது சிறந்தது. குடும்பத்தில் ஏதாவது பிரச்சனை தலைதூக்கலாம். எல்லோரையும் அனுசரித்து செல்வது நன்மை தரும்.







தனுசுராசி அன்பர்களே! எந்த காரியத்தையும் செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். பகைவர்களால் ஏற்படும் சிறு தொல்லைகளை சமாளிக்க வேண்டி இருக்கும். புதிய நண்பர்களுடன் பழகும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். அலுவலக பணிகள் மூலம் பதற்றம் உண்டாகும்.




மகரராசி அன்பர்களே! வீண் செலவுகள் ஏற்படும்.எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். கொடுத்த வாக்கை காப்பாற்ற பாடுபட வேண்டி இருக்கும். மற்றவர்களின் பிரச்சனைகளுக்கு வலிய சென்று உதவிகள் செய்வதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண மிகவும் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். பார்ட்னர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது.




கும்பராசி அன்பர்களே! அதிகம் உழைக்க வேண்டியது அவசியம். தேவையற்ற பயணங்கள் அதன் மூலம் அலைச்சல், உடல் நல சோர்வு ஏற்படலாம். அடுத்தவரை நம்பி எதையும் ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது. சுபசெலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி நடக்கும். பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்படலாம். போட்டிகள் தலைதூக்கும்.




மீனராசி அன்பர்களே! நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும். நீண்ட நாட்களாக திட்டமிட்ட வாகனம் சொத்து மற்றும் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பயணங்கள் சாதகமான பலன் தருவதாக இருக்கும். உடல் ஆரோக்யம் மேம்படும். தெய்வ பக்தி அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூ லாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மன மகிழ்ச்சியடைவார்கள்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# 16வது மே18ம் உள்ளூராட்சி சபைகளும்

(15ம் பக்கத் தொடர்ச்சி) ' என்பதும் மிக முக்கியம்.எனவே ஐக்கியத்திற்காக உழைக்கும் போது இறுதித் தீர்வு தொடர்பாக தெளிவான திட்டவட்டமான கொள்கைகளை முன் வைத்து உடன்படிக்கைகளை எழுதலாம். எது வேண்டாம் என்று கேட்பதற்குப் பதிலாக இது தான் வேண்டும் இது அல்லாத வேறு எந்தத் தீர்வை நோக்கியும் போக முடியாது. அந்தத் தீர்வு வெளிப்படைத்தன்மை மிக்கதாக இருக்க வேண்டும் உச்ச நீதிமன்றத்தில் வழக்குப் போட்டால், அது ஒற்றையாட்சிப் பண்புடையது என்று உச்சநீதிமன்றம் பொருள் கோடமுடியாததாகவும் இருக்க வேண்டும் என்பதனை எழுத்தில் போட்டால், அதை மீறும் கட்சியை மக்கள் முன் அம்பலப்படுத்தலாம்.

இப்போதுள்ள கட்சி நிலவரங்களின்படி, உள்ளூராட்சி சபை நிர்வாகத்தை நோக்கியோ அல்லது மாகாண சபைத் தேர்தல்களை நோக்கியோ முழுமையான தமிழ் ஐக்கியத்துக்கு வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை. கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டது போல ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழரசுக் கட்சியை நோக்கி அதிகம் சாய்வதாகத் தெரிகிறது. சங்குச் சின்னத்தின் கீழ் பொது வேட்பாளரை ஆதரித்தவர்களுக்கு எதிராக விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பும் ஒரு கட்சி, அதே சங்குச் சின்னத்தின் கீழ் பொது வேட்பாளரை ஆதரித்த கட்சிகளோடு உடன்பாட்டுக்கு வரத் தயாராக இருக்கிறது. அது தான் தேர்தல் அரசியல். இதன் மூலம் தமிழ்த் தேசியப் பேரவையைத் தனிமைப்படுத்தலாம் என்றும் அவர்கள் சிந்திக்கக் கூடும்.

எதுவாயினும் இன அழிப்பை நினைவு கூரும் ஒரு காலகட்டத்தில் தியாகிகளையும் கொல்லப்பட்டவர்களையும் நினைவுகூரும் ஒரு காலகட்டத்தில் உயிரைக் கொடுத்தவர்களின் ஆத்மாக்களை மகிழ்விக்க கூடிய ஒரு முடிவை எடுக்கா விட்டாலும் பரவாயில்லை ஆகக் குறைந்தது மாகாண சபைத் தேர்தலில் என்பிபிக்கு தமிழ் மக்களின் ஆணை கிடைப்பதைத் தடுப்பதற்காவது ஏதாவது செய்ய வேண்டும்.

# வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி

(16ம் பக்கத் தொடர்ச்சி) தமிழ்த் தேசியக் கட்சிகளும் கிழக்கின் தனித்துவக் கட்சிகளும் அரசியல் செல்நெறியை உண்மையாகவும் – நேர்மையாகவும் – வெளிப்படைத் தன்மையுடனும் – சுயலாபத்தைத் துறந்து முழுக்க முழுக்க மக்கள் நலன் சார்ந்ததாயும் தகவமைத்துக் கொள்ளல் அவசியம். அதாவது இவர்கள் தமது சுயலாப அரசியலை – மக்களை ஏமாற்றும் அரசியலைக் கைவிடவேண்டும்.

அது போலவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் வடக்கு கிழக்குத் தமிழர்களுடைய மனதை வென்றெடுக்கும் வகையில் அபிவிருத்திச் செயற்பாடுகளையும் அரசியல் தீர்வுச் செயற்பாடுகளையும் குறைந்தபட்சம் 13 ஆவது திருத்தத்தை முழுமையாகவும் முறையாகவும் அமுல் செய்யும் வகையிலான அரசியல் மற்றும் நிர்வாக செயற்பாடுகளையும் சமகாலத்தில் சமாந்தரமாக இதய சுத்தியோடு மேற்கொள்ளல் அவசியம். வெறுமனே வாக்குறுதிகளும் வார்த்தை ஜாலங்களும் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தாது

இல்லையேல் இம்முறை கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச சபையில் சுயேச்சைக் குழுவொன்றிற்குக் காட்டப்பட்ட பச்சை விளக்கு எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் அவ்வாறானதொரு புதிய மாற்று அரசியலுக்கே கிழக்கு மாகாணத்திலும் வடக்கு மாகாணத்திலும் காட்டப்படும். அதுவே காலத்தின் தேவையும் ஆக இருக்கும்.

மேலும் தமிழ் அரசியல் கட்சிகளின் கடந்த கால நடத்தைகள் குறித்து அதிருப்தி கொண்டவர்களும் அதே வேளை தென்னிலங்கைக் கட்சியொன்றிற்கு (தேசிய மக்கள் சக்திக்கு) வாக்களிக்க விரும்பாதவர்களும் வாக்குச்சாவடிகளுக்குச் செல்லாமலே இருந்துள்ளனர். எவருக்கு வாக்களித்தாலும் எதுவுமே நடக்கப் போவதில்லை என்ற அவநம்பிக்கையும் சலிப்பும் தான் அதற்குக் காரணம். வடக்கு கிழக்கில் தமிழ் வாக்காளர்களில் சராசரியாக 40 வீதமானவர்கள் வாக்களிக்கவில்லை.

ஆக, தமிழர்களின் உரிமைப் போராட்ட அரசியலும் – அபிவிருத்தி அரசியலும் ஒன்றோடொன்று இணைந்தும் பிணைந்தும் செல்ல வேண்டியதொரு புதிய முறைமை மாற்றத்தை வேண்டி நிற்கிறது என்பதை இந்த உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல் மிகவும் நுணுக்கமாக உணர்த்தியுள்ளது.

ஒட்டுமொத்தமாக நோக்கினால் வடக்கு கிழக்குத் தமிழர்கள், தமிழ்த் தேசியக் கட்சிகள் கிழக்குத் தனித்துவக் கட்சிகள் ஆட்சியதிகாரத்திலுள்ள தேசிய மக்கள் சக்தி என எல்லோருக்குமே இத்தேர்தலில் 'எச்சரிக்கை மணி' அடித்துக் காட்டியுள்ளனர். இதில் இக்கட்சிகள் பெருமைபட்டுக் கொள்ள எதுவுமில்லை. இதனை புரிந்து கொள்ளாமல் 'விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்கிற மாதிரி கதையளப்பார்களாயின், வடக்கு கிழக்கு மாகாணத் தமிழர்களின் எதிர்காலம் மட்டுமல்ல முழு நாட்டினதும் எதிர்காலமும் 'பழைய குருடி கதவை திறடி' கதையில்தான் போய் முடியும். முறைமை மாற்றம் என்பது எட்டாக் கனியாகி விடும் நிலை தான் வந்து சேரும்.

# அமெரிக்க ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில்

(24ம் பக்கத் தொடர்ச்சி) அந்நியப்படுதல் மற்றும் கல்வி தணிக்கை குறித்த ஆழமான உணர்வுகளைக் கொண்டிருந்ததாகவும் முடிவு செய்தன. அவை தீர்வுகளாக பரந்த பரிந்துரைகள் மற்றும் கொள்கை மாற்றங்களை உள்ளடக்கியிருந்தன. அவற்றில் சிலவற்றை ஹார்வர்ட் ஏற்கனவே செய்துள்ளது.

நிர்வாகத்தின் கோரிக்கைகளுக்கு இணங்க ஹார்வர்டு சில மாற்றங்களையும் செயல்படுத்தியுள்ளது. அதில் அதன் சமத்துவம், பன்முகத்தன்மை, உள்ளடக்கம் மற்றும் சமூகம் மற்றும் வளாக வாழ்க்கைக்குச் சொந்தமான அலுவலகத்தின் பெயரை மாற்றுவதும் அடங்கும்.

நிர்வாகம் ஹார்வர்டை கடுமையான பழிவாங்கும் நடவடிக்கைகளால் தாக்கியுள்ளது. இதில் 2.2 பில்லியன் டாலர் கூட்டாட்சி நிதியை முடக்குவதும் அடங்கும். இந்த நடவடிக்கையை பல்கலைக்கழகம் நீதிமன்றத்தில் எதிர்த்துப் போராடுகிறது. ஹார்வர்டின் வரி விலக்கு நிலையை இரத்து செய்ய உள்நாட்டு வருவாய் சேவையும் திட்டமிட்டுள்ளதாக நன்கு தகவல் அறிந்த இரண்டு வட்டாரங்கள் தெரிவித்தன.

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

*At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

*Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







# அமெரிக்க ஹர்வர்டு பல்கலைக்கழகத்தில் வெளிநாட்டு மாணவர்கள் படிக்கத் தடை விதித்தது டிரம்ப் நிர்வாகம்!

அமெரிக்காவின் ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தின் சர்வதேச மாணவர்களைச் சேர்க்கும் திறனை டிரம்ப் நிர்வாகம் இரத்து செய்தது.



டிரம்பின் நிர்வாகத்தின் கொள்கை கோரிக்கைகளுக்கு அடிபணிய மறுத்த தற்காக இந்த தண்டனை வழங்கப் பட்டதாக கூறப்படுகிறது.

ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் இனி வெளிநாட்டு மாணவர்களைச் சேர்க்க முடியாது. ற்கனவே உள்ள வெளி நாட்டு மாணவர்கள் தங்கள் சட்டப் பூர்வ அந்தஸ்தை மாற்ற வேண்டும் அல்லது இழக்க வேண்டும் என்று அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை ஒரு அறிக்கையில் தெரிவித்து ள்ளது.

கடந்த மாதம் DHS கோரிய வெளி நாட்டு மாணவர்களின் நடத்தை பதிவு களை வழங்க பல்கலைக்கழகம் மறுத் ததைக் காரணம் காட்டி, ஹார்வர்டின் மாணவர் மற்றும் பரிமாற்ற வருகை யாளர் திட்ட (SEVP) சான்றிதழை ரத்து செய்ய உள்நாட்டுப் பாதுகாப்புச் செயலாளர் கிறிஸ்டி நோயம் தனது துறைக்கு உத்தரவிட்டார். இந்த முடிவு ஹார்வர்டின் சர்வதேச மாணவர் அமைப்பில் கால் பங்கிற்கும் அதிக மானவர்களை பாதிக்கக்கூடும். அவர் கள் இந்த அறிவிப்பால் பதட்டத்திலும் குழப்பத்திலும் தள்ளப்பட்டுள்ளனர். வெளிநாட்டு மாணவர்கள் பெருமள வில் வெளியேறுவது நிறுவனத்தின் கல்வித் திறனை நசுக்க அச்சுறுத்து கிறது என்று பேராசிரியர்கள் எச்சரிக் கின்றனர்.

வெளிநாட்டு மாணவர்களைச் சேர்ப் பது ஒரு சலுகை, உரிமை அல்ல என்று வெள்ளை மாளிகை கூறியது. மேலும் ஹார்வர்ட் தலைமை 'ஒரு காலத்தில் சிறந்த நிறுவனமாக இருந்த அவர்களின் நிறுவனத்தை அமெரிக்க எதிர்ப்பு, யூத எதிர்ப்பு, பயங்கரவாத ஆதரவு கிளர்ச்சியாளர்களின் சூடான படுக்கையாக மாற்றியதாக குற்றம் சாட்டியது.

அமெரிக்க மாணவர்களை எதிர்மறை யாக பாதிக்கும் பரவலான பிரச்சினை களை நிவர்த்தி செய்ய அவர்கள் பல முறை நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டனர், இப்போது அவர்கள் தங்கள் செயல்களின் விளைவுகளை எதிர் கொள்ள வேண்டும் என்று வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் அபி கெய்ல் ஜாக்சன் சி.என்.என் ஊடகத் திற்கு அளித்த அறிக்கையில் தெரி வித்தார். பல்கலைக்கழக வளாகத்தில் யூத எதிர்ப்பு உணர்வை வேரறுக்க வும், இனவெறி 'பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கிய' நடைமுறைகளை' அகற்றவும், வளாக நிகழ்ச்சி நிரல், கொள்கைகள், பணிய மர்த்தல் மற்றும் சேர்க்கை ஆகியவற் றில் மாற்றங்களைச் செய்ய டிரம்ப் நிர்வாகம் கோருவதால் ஹார்வர்ட் மற்றும் டிரம்ப் அதிகாரிகள் பல மாதங்களாக மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

இஸ்ரேல்-ஹமாஸ் போரில் சர்ச்சைக் குரிய வளாகப் போராட்டங்களில் பங்கேற்றதாக நம்பும் வெளிநாட்டு மாணவர்கள் மற்றும் ஊழியர்களை நிர்வாகம் குறிவைத்துள்ளது. ஆனால் பல்கலைக்கழகத் தலைமை, அதன் மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் கண்ணோட்டத்தின், தணிக்கை உட்பட பல கோரிக்கைகள் மத்திய அரசாங்கத்தின் பங்கிற்கு அப்பாற்பட் டவை என்றும் ஹார்வர்டின் அரசிய லமைப்பு உரிமைகளை மீறக்கூடும் என்றும் வாதிடுகிறது.

டிரம்ப் நிர்வாகத்திடமிருந்து இதே போன்ற கோரிக்கைகளை எதிர்கொள் ளும் டஜன் கணக்கான அமெரிக்க பல்கலைக்கழகங்களில் ஹார்வர்டும் ஒன்றாகும், ஆனால் அது அதன் கல்வி சுதந்திரத்தின் தீவிர பாதுகாவல ராக உருவெடுத்துள்ளது.

SEVP ரத்து செய்யப்பட்டதை சட்ட விரோதமானது என்று பல்கலைக்கழ கம் உடனடியாகக் கண்டித்தது. 140 க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த சர்வதேச மாணவர்கள் மற்றும் அறிஞர் களை வரவேற்கும் ஹார்வர்டின் திறனைப் பராமரிப்பதில் முழுமையாக உறுதி பூண்டுள்ளது. மேலும் அவர் கள் பல்கலைக்கழகத்தையும் இந்த தேசத்தையும்அளவிட முடியாத அளவு க்கு வளப்படுத்துகிறார்கள் என்று ஒரு அறிக்கையில் கூறியது. எங்கள் சமூக உறுப்பினர்களுக்கு வழிகாட்டுதலை யும் ஆதரவையும் வழங்க நாங்கள் விரைவாகச் செயல்பட்டு வருகிறோம். இந்தப் பழிவாங்கும் நடவடிக்கை ஹார்வர்ட் சமூகத்திற்கும் நமது நாட்டிற்கும் கடுமையான தீங்கு விளைவிக்கும் அச்சுறுத்தலை ஏற்படு த்துகிறது.

மேலும் ஹார்வர்டின் கல்வி மற்றும் ஆராய்ச்சி நோக்கத்தை குறைமதிப் பிற்கு உட்படுத்துகிறது என்று பல்கலைக்கழக செய்தித் தொடர்பாளர் ஜேசன் நியூட்டன் கூறினார்.

இந்தப் பல்கலைக்கழகத்தில் மிகப் பெரிய வெளிநாட்டு மாணவர்கள் எண்ணிக்கை உள்ளது, இது பாதிக்க ப்படலாம். அதன் சர்வதேச கல்வி மக்கள் தொகையில் 9,970 பேர் இருப்ப தாகவும், 2024-25 கல்வியாண்டில் அதன் சேர்க்கையில் 27.2மூ பேர் 6,793 சர்வதேச மாணவர்கள் என்றும் தரவு காட்டுகிறது.

பல கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களைப் போலவே, ஹார்வர்டும் கடந்த ஆண்டு இஸ்ரேல் - ஹமாஸ் போர் தொடங்கியதைத் தொடர்ந்து பாலஸ்தீன சார்பு போராட்டங்கள் மற்றும் முகாம்களைக் கையாண்டதற் காக கடுமையான விமர்சனங்களைப் பெற்றது. அத்துடன் வளாகத்தில் யூத எதிர்ப்பு குறித்து யூத முன்னாள் மாண வர்கள் மற்றும் மாணவர்களிடமிரு ந்து புகார்கள் வந்தன.

கடந்த மாதம் இரண்டு ஹார்வர்ட் பணிக்குழுக்கள் வெளியிட்ட அறிக்கைகள், 2023-24 கல்வியாண்டில் யூத மற்றும் முஸ்லிம் மாணவர்கள் இருவரும் தங்கள் பாதுகாப்பு குறித்து அஞ்சுவதாகவும், வளாகத்தில் (22ம் பக்கம் பார்க்க)

